அறிவுச்சுரங்கம்

"மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்"



இதழ் 06

தேசிய வாசிப்புமாத சிறப்பிதழ்

NATIONAL READING MONTH JOURNAL

பொது நூலகம், மாநகரசபை, மட்டக்களப்பு
PUBLIC LIBRARY, MUNICIPAL COUNCIL, BATTICALOA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம்

இதழ் ~ 6

தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர் - 2025

இதழாசிரியர்

செல்வி.த.சிவராணி

வெளியீடு

பொது நூலகம்

மாநகர சபை

மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தோற்றம்: ஒக்டோபர் 2020

(21 வது தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வெளியிடப்பட்ட சஞ்சிகை)

ஆலோசனை:

1. திரு.சிவம் பாக்கியநாதன்(கௌரவ முதல்வர்)
2. திரு.வை.தினேஸ்குமார்(கௌரவ பிரதி முதல்வர்)
3. திரு. நா.தனஞ்ஜெயன்(மாநகர ஆணையாளர்

பிரதம ஆசிரியர்:

செல்வி : தவராஜா சிவராணி

(பிரதம நூலகர்)

சஞ்சிகைக் குழு:

1. திருமதி : றமா ராசலிங்கம்
2. திருமதி: விஜயராணி விஜயநாதன்
3. திருமதி: மந்தாஹினி ரவீந்திரன்

வழிகாட்டலும் மேற்பார்வையும்:

திரு.துரைசிங்கம் மதன்

(நூலக குழுத் தலைவர்)

கணினி அச்சுக்கோர்ப்பும் வடிவமைப்பும்:

திரு : ம.லக்ஸ்மன்

திரு : சு.சரவணதாஸ்

வெளியீடு: பொது நூலகம்

மாநகர சபை,மட்டக்களப்பு.

Tel:0652222484

E.mail: batticaloalibrary@gmail.com

OPAC : batticaloa.dlp.gov.lk

Facebook: மட்டக்களப்பு பொது நூலகம்

Page : batticalao library

அன்பார்ந்த வாசகர்களே!

21வது தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாநகர சபையின் கீழ் இயங்கும் பொது நூலகத்தினால்வெளியிடப்படும் சஞ்சிகை இதுவாகும்.

"அறிவுச் சுரங்கம்" என்னும் மலர் வெளிவர எமக்கு ஆதரவினையும், அரவணைப்பினையும் வழங்கி புத்துணர்ச்சி ஊட்டிய எமது மாநகர முதல்வர் சிவம் பாக்கியநாதன் அவர்களுக்கும் பிரதி முதல்வர் வைரமுத்துதினேஸ்குமார்,அவர்களுக்கும் மாநகரஆணையாளர் ந.தனஞ்ஜெயன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது "அறிவுச் சுரங்கம்" சஞ்சிகைக்கு ஆக்கங்களை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

செல்வி :தவராஜா சிவராணி

பிரதம ஆசிரியர்

.....

"ஒரு எழுத்தாளன் ஒரு புத்தகத்தை தொடங்கி வைக்கின்றான் வாசகன் அதை முடித்து வைக்கின்றான்"

—— சாமுவேல் ஜான்சன்——

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சஞ்சிகை விபரம்

சஞ்சிகையின் பெயர்	அறிவுச் சுரங்கம்
இதழ்	ஆறாவது
இதழாசிரியர்	செல்வி.த.சிவராணி (நூலகர் பொது நூலகம்)
வெளியீடு	பொதுநூலகம்,மாநகரசபை மட்டக்களப்பு
பதிப்புரிமை	வெளியீட்டானருக்கே
ஆண்டு	2025
பக்கங்கள்	83
ஆக்கங்களுக்கு	ஆக்கியோரே பொறுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கௌரவ மாநகர முதல்வரின்

வாழ்த்துச் செய்தி

மறுமலர்ச்சிக்காக வாசிப்போம் எனும் தொனிப்பொருளின் கீழ் வாசிப்பு என்பது அறிவின் ஒளிக்கீற்றாகும். மனிதனின் அறிவுக் களஞ்சியத்தை விரிவுபடுத்தி மனித வாழ்வின் ஒவ்வொரு துளியிலும் ஒளி பாய்ச்சுகிறது. ஒரு புத்தகத்தின் பக்கங்களில் மறைந்திருக்கும் அறிவும் அனுபவமும் வாசகரின் உள்ளத்தை ஒளியூட்டி ஊக்குவிக்கின்றன. அறிவு ,சிந்தனை, உணர்வு ஆகியவற்றை ஒருங்கே வளர்க்கும் வாசிப்பு பழக்கம் தான் ஒரு சமூகத்தின் உண்மையான செல்வம்.

இந்த அருமையான நோக்கத்துடன் மட்டக்களப்பு மாநகராட்சிக்குட்பட்ட நூலகங்கள் முன்னெடுத்து வரும் வாசிப்பு மாதம் எனும் முயற்சி சமூகத்தில் அறிவு,கலாசாரம் மற்றும் சிந்தனை பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் சிறந்த மேடையாக அமையும்.இந் நிகழ்வை முன்னிட்டு வெளியிடப்படும் சஞ்சிகைகள் மாணவர்களுக்கும் இளம் தலைமுறையினருக்கும் புதிய ஆக்கமும், ஊக்கமும் உந்துசக்தியுமாக இருக்கும்.

இன்றைய டிஜிட்டல் உலகில் புத்தக வாசிப்பு பழக்கம் குறைந்து வரும் நிலையில் இத்தகய நிகழ்வுகள் வாசிப்பின் மதிப்பை மீண்டும் உயிர்ப்பிக்கின்றன. வாசிப்பானது தனி மனித பூரணத்துவத்திற்கும் ஆரோக்கியமான சமூக நாகரிகத்திற்கும் திறவுகோலாக அமைகிறது.

நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகின்ற தேசிய வாசிப்பு மாத செயற்பாட்டிற்கு அமைவாக, மட்டக்களப்பு மாநகர சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற மட்டக்களப்பு பொது நூலகம் தனது பிரதேசத்தில் மறுமலர்ச்சிக்காக வாசிப்போம் என்ற தொனிப் பொருளில் இவ் வருடத்திற்கான வாசிப்பு மாத நிகழ்வினை தனித்துவமாக ஒழுங்கமைத்து நடாத்தி வருகின்றதையிட்டும், வாசிப்புத் திறன் குறைந்த நிலையில் காணப்படுகின்ற வளர்ச்சியடைந்து வரும் பிரதேசங்களில் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் வகையில் மட்டக்களப்பு பொது நூலகத்தின் நூலகரும் அங்கு கடமையாற்றும் ஊழியர்களும் இணைந்து செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதையிட்டு மாநகரத்தின் நகரபிதா என்ற வகையில் பெருமிதமடைகின்றேன்.

அந்த வகையில் மட்டக்களப்பு பொது நூலகத்தின் இவ்வருட வாசிப்பு மாத நிகழ்வினை முன்னிட்டு சிறப்பு சஞ்சிகை ஒன்று வெளியிடப்படுவதையிட்டு மிகவும் மகிழ்வுறுகின்றேன். இச்சஞ்சிகையானது வாசிப்பு தொடர்பானதும் குறித்த நூலகம் சார்ந்ததுமான பல விடயங்களை தன்னகத்தே தாங்கி வெளி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அந்த வகையில் இந்த தொடர் முயற்சியானது உள்ளத்தை தொட்டுச் செல்லக்கூடிய ஓர் நிகழ்வாக அமையவும், இதன் மூலம் மேலும் பல வாசகர்களும் கல்விச் செல்வங்களும் நூலகங்களுடன் இணைய வேண்டும் என எதிர்பார்த்து இந்த உயர்ந்த முயற்சியை சிறப்பாக முன்னெடுத்து வரும் ஏற்பாட்டுக் குழுவினருக்கு எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கின்றேன்.

(வாசிப்போம் - விழிப்போம் - வளர்வோம்)

சிவம் பாக்கியநாதன்,
மாநகர முதல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கௌரவ மாநகர பிரதி முதல்வரின் வாழ்த்துச் செய்தி

எமது மாநகர சபையின் " மறுமலர்ச்சிக்காக வாசிப்போம் " என்னும் தொனிப்பொருளின் ஆக்கபூர்வமானதும் பலரது ஆற்றல்களை துண்டுகின்ற விதத்திலும் சிறப்பாக பல்வேறு வழிகளிலும் கொண்டாடப்பட்ட வாசிப்பு மாதத்தினையொட்டி வெளி வரும் இச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வாசிப்பு என்பது ஒவ்வொருவரதும் சிந்தனை பூர்வமான அறிவையும் விமர்சன நோக்கினையும், தகவல் தேடல் பண்பினையும், உலகத்தை அறியும் வாய்ப்பினையும், மொழி வல்லமையையும் முருகியியல் உணர்வினையும், கற்பனை வளத்தினையும் வழங்கவல்லது.இதனால் தான் மனித வாழ்விற்கு வாசிப்பு மிக அவசியமானது.அதுமட்டுமன்றி வாசிப்பின் அவசியத்தினை பல அறிஞர்கள் தமது வாழ்க்கையில் கடைப்பிடித்துச் சென்றமையினை நான் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தம் என்று நினைக்கின்றேன்.

மரண தண்டனைக்காக தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லும் போது நூலை வாசித்து கொண்டு சென்றவர் பகவத் சிங் அவர்கள். தான் படித்த நூல் வாசித்து முடிவில்லை என்பதற்காக அதை படித்து முடிப்பதற்காக தனது சத்திர சிகிச்சையினையே ஒரு நாள் பின் தள்ளி போட்டவர் அறிஞர் அண்ணாத்துரை. அது போன்று படிப்பினால் மாத்திரமே பாராள முடியும் என்று சொல்லி அதை சாதித்து காட்டியவர் அப்துல் கலாம் அவர்கள். இவை எல்லாம் எமக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

இறுதியாக எமது மாநகர சபையின் வாசிப்பு மாதத்தினை அர்த்தமுள்ளதாக்கி சிறப்பாக கொண்டாடுவதற்கு பல்வேறு வழிகளிலும் உதவிய மாநகர முதல்வர், மாநகர ஆணையாளர், மாநகர சபை நூலகக் குழு, மாநகர சபை உறுப்பினர்கள், நூலக உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினர் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இச் சிறப்பு மலர் சிறக்கவும், இப் பணி வருடா வருடம் தொடரவும் அதன் மூலம் எமது மாநகரம் ஓங்கவும் வாழ்த்துகின்றேன்.

திரு.வை.தினேஸ்குமார்
பிரதி முதல்வர்,
மாநகர சபை - மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாநகர ஆணையாளரின்

வாழ்த்துச் செய்தி

தேசிய வாசிப்பு மாதத்தில் மட்டக்களப்பு நூலக சேவையினை எண்ணிப்பார்க்கையில் கிழக்கு மாகாணத்தில் முதற்தரமான பொது நூலகம் மட்டக்களப்பு மாநகர சபையின் கீழ் இயங்குகின்றது என்பது பெருமையாக உள்ளது. இந்நூலகத்தின் வளர்ச்சி படிப்படியாக முன்னேறி வந்து தற்போது நவீன வசதிகளுடன் கூடிய கணனி மயப்படுத்தப்பட்டதும் தன்னியக்கமானதுமான வசதிகளைக் கொண்டதாக இயங்கி வருகின்றது.

இதன் வரலாறு மிகப் பழைமையானதும், மட்டக்களப்பு பாரம்பரியங்களையும், கலை கலாசார விழுமியங்களையும் நீண்ட காலமாக முன்னெடுத்து வந்து இன்றைய நவீன தொழில்நுட்ப காலத்துடன் இணைந்துள்ளது. என்பதனை வெளிப்படையாக கூறலாம்.

மட்டக்களப்பு பொது நூலகத்தின் பயனை அனுபவித்து மேல் நிலை அடைந்தவர்கள் பலர். அவர்கள் இன்னும் இந்நூலகத்தின் பெருமையையும், தனிச் சிறப்பினையும் பேசுவார்கள்.

இன்று இளையோர் மத்தியில் வாசிப்புப் பழக்கம் குறைந்து விட்டது என குறைகூறப்படுகின்றது. அதனால் தான் இந்த வாசிப்பு மாதம் அவர்களை வாசிப்பின்பால் ஈர்க்க முற்படுகின்றது.

"மறுமலர்சிக்காக வாசிப்போம்" என்னும் தொனிப்பொருளில் 2025ம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதமானது கொண்டாடப்பட்டது, இந்நிலையில் மட்டக்களப்பு பொது நூலகத்தினரால் **"அறிவுச்சுரங்கம் இதழ் 6"** சஞ்சிகை வெளியிடுவது பாராட்டுக்குரியது. இந்தப் பணியில் ஆக்கங்களைத் தந்து மற்றும் முன்னின்று பணியாற்றிய அனைவரையும் பாராட்டுகின்றேன்.
உங்கள் பணி தொடரட்டும். வாசிப்பதனூடாக வாழ்வை வளப்படுத்துவோம்.

நா.தனஞ்ஜெயன் SLAS-1
மாநகர ஆணையாளர்
மாநகர சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நூலக குழுத் தலைவரின்
வாழ்த்துச் செய்தி

வாழ்வின் மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்

ஓர் மனிதன் சிறந்த நல் ஒழுக்கம் உள்ள மனிதனாக வரவேண்டுமாக இருந்தால் அவருக்கு சிறந்த சிந்தனைகள் உருவாக வேண்டும். சிறந்த சிந்தனைகள் உருவாக வேண்டுமாக இருந்தால் நல்ல சிறந்த அறிவான வாசிப்பு பழக்கம் இருக்க வேண்டும். அந்த வகையிலே எமது மாநகர சபையானது பல நூலகங்களை உருவாக்கி நிருவகித்து வருகின்றது. மாநகர சபையின் கட்டளை சட்டங்களிலே பிரதான நிலையியல் குழுக்களாக நான்கு உள்ளது. அவையாவன நிதிக்குழு, வேலைக்குழு, சுகாதாரக்குழு, நூலகக்குழு ஆகும்.

இதில் இருந்து தெளிவாக விளங்குகின்றது. நூலகக்குழுவினதும் நூலகத்தினதும் முக்கியத்துவமாகும்.எனவே அனைவரும் பெரும் எதிர்பார்ப்புடன் எதிர்பார்த்திருக்கும் புதிதாக கட்டப்பட்டிருக்கும் பொது நூலகத்தினையும் வெகு விரைவில் பொருப்பேற்பதற்கும் திறந்து வைப்பதற்குமான முழு முயற்சிகளையும் எடுத்து இறுதி தருவாயிலே இருக்கின்றோம் என்னும் மகிழ்சியான செய்தியினையும் இந்த வாழ்த்து செய்தியின் ஊடாக தெரிவித்துக்கொள்வதுடன் மாநகரத்தின் பெரும் சொத்தாக பொக்கிஷமாக கிடைக்க இருக்கின்ற நூலகத்திற்காக உழைத்த அனைவருக்கும் நன்றிகளை நூலகக்குழுத் தலைவர் எனும் ரீதியிலே கூறிக்கொள்கின்றேன்.

அந்த வகையில் சிறந்த முறையில் மாநகர சபையின் நூலக செயற்பாட்டிற்கு உறுதுணை அளிக்கும் எமது மாநகர முதல்வர், பிரதி முதல்வர், உறுப்பினர்கள், ஆணையாளர்,பிரதி ஆணையாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் நூலகர்கள், ஊழியர்கள் அனைவரையும் இந்த நேரத்தில் வாழ்த்துவதுடன் எமது மக்களும் இதனால் பயன் பெற்று சிறந்த பிரஜைகளாக வாழ வேண்டும் என்று வாழ்த்தி இந்த வாழ்த்துச் செய்தியை சமர்ப்பிக்கிறேன்.

திரு.துரைசிங்கம் மதன்
நூலகக்குழு தலைவரும்,
மாநகர சபை உறுப்பினரும்,
மாநகர சபை,மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாநகர பிரதி ஆணையாளரின்

வாழ்த்துச் செய்தி

“ **மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்** ” எனும் தொனிப்பொருளினல் 2025ம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதமானது கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் மட்டக்களப்பு பொது நூலகத்தினரால் “ **அறிவுச்சுரங்கம் இதழ் 6** ” என்னும் தலைப்பில் கட்டுரைகள், கவிதைகள், வாசிப்பு சார்ந்த கதைகள் எனப் பல்வேறு ஆக்கங்களை தாங்கி வெளிவரும் இச்சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வு கொள்கின்றேன்.

மனித பண்புகளில் பிரதான ஒன்றாக பகுத்தறிவு காணப்படுகின்றது. இத்தகைய பகுத்தறிவின் பூரண வளர்ச்சிக்கு வாசிப்பு என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இவ்வாறான வாசிப்பினை ஊக்குவிப்பதில் நூலகங்கள் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனினும் அண்மைக் காலங்களில் வாசகர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து கொண்டு செல்கின்றது. இதனை தவிர்க்கும் நோக்கில் இவ்வருட தேசிய வாசிப்பு மாதத்தின் தொனிப்பொருளாக **“மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்”** என்பது காணப்படுகின்றது. இதற்கு செயல் வடிவம் கொடுப்பது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

இதனடிப்படையில் இவ்வருட தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றுள்ளதுடன் அதன் ஓர் அங்கமாக **“அறிவுச்சுரங்கம் இதழ் 6”** என்னும் இச்சஞ்சிகையினை வெளியிடும் மட்டக்களப்பு பொதுநூலக நூலகர் மற்றும் அனைத்து நூலக உத்தியோகத்தர்களுக்கும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இச்சஞ்சிகைக்கான ஆக்கங்களை வழங்கிய எழுத்தாளர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்து தங்களது முயற்சி தொடர்ந்தும் வெற்றிபெற எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வ.தேவநேசன்
பிரதி ஆணையாளர்
மாநகர சபை
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிருவாகஉத்தியோகத்தரின் வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு பொதுநூலகத்தினரால் 'வாசிப்புமாதம் 2025'ற்காகவெளியிடப்படும் **"அறிவுச்சுரங்கம்இதழ்-6"** சஞ்சிகைக்கு எனதுவாழ்த்துச் செய்தியை வழங்குவதில் அகமகிழ்கின்றேன்.

மாணவர்கள் மத்தியில் வாசிப்புத் திறனை வளர்க்க வேண்டுமென்ற அடிப்படையில் மட்டுமாநகரசபையானது வருடந்தோறும் செயற்படுத்திவருகின்ற வாசிப்பு மாதநிகழ்வானது உண்மையில் பாராட்டப்படவேண்டியவிடயம். ஆதனை செயற்படுத்தி நடைமுறைப்படுத்தும் நூலகங்கள் இவ்வாறான சஞ்சிகைகள் வெளியிடுவதுமிகவும் பாராட்டப்படவேண்டியது.

வாசிப்பை சுவாசிப்பாக கொண்டவர்கள் அறிவால்யாசிக்கப்படுகின்றனர். அவர்கள் சமுதாயத்தில் போற்றப்படுவர்களாகவும் சமூகத்தை நல்லவழியில் சுபீட்சிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

மொழி தகவல்களைப் பரிமாற்றும் ஊடகமாகவுள்ளதால் எழுத்துமொழி நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்கக்கூடியவகையில் அப்பணியைப் புரிகின்றது. வாசகர்களுக்கு அறிவுச் சுரங்கத்தில் அகழப்படுகின்ற ஆக்கங்கள்அறிவின், ஆழத்தை வெளிக்காட்டும். இம்முயற்சி இடைவிடாது தொடரட்டும் எனக் கேட்டுக் கொள்வதுடன், அறிவுச்சுரங்கத்திற்கும் அதனுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் எனதுமனம் நிறைந்த வாழ்த்துக்களினையும், பாராட்டுக்களினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி.த.உமாச்சந்திரன்
நிருவாக உத்தியோகத்தர்
மாநகர சபை
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசகர்வட்ட தலைவரின் வாழ்த்துச் செய்தி

தேசிய வாசிப்பு மாதத்தினை(2025) முன்னிட்டு மட்டக்களப்பு நூலகத்தினால் வெளியிடப்படும் **"அறிவுச்சுரங்கம்"** சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் அகமகிழ்கிறேன்.

"நல்லதோர் மனிதனுக்கு நல்லதோர் புத்தகம் வாழ்நாள் முழுவதற்குமான நல்லதோர் பொக்கிஷமாகும்" என்றான் ஓர் பேரறிஞன். புத்தக வாசிப்பின் மூலம் வாழ்வில் சிகரத்தை தொட்ட எத்தனையோ சாதனையாளர்களை நாம் வரலாறு முழுவதும் சந்திக்கின்றோம். அவர்களை பட்டியலிட்டால் இந்த மலரே போதாது.

அனுபவங்களேமனிதனைப் பட்டை தீட்டுகின்றன. ஒரு மனிதனால் வாழ்க்கை அனுபவங்கள் அத்தனையையும் தன் வாழ்நாளில் பெறமுடியாது. அவ்வாறான அனுபவங்களைப் பதிவு செய்த பேரறிஞர்களின் புத்தகங்களைப் படிப்பதன் மூலம் மனிதன் முழுமையடைகிறான். எனவே வாசிப்பை நேசிப்போம், புத்தகங்களின் உயிர்மூச்சை சுவாசிப்போம், அதனால் வாழ்வில் வைரங்களாய்ப் பிரகாசிப்போம்.

சோ.அருளானந்தம்
தலைவர்
வாசகர்வட்டம்
மட்டக்களப்பு நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நூலாசிரியரின் இதயத்திலிருந்து

பலநாட் போரின் விளைவாக ஒரு கீதை பிறந்தது. அதுபோல் 30நாள் தேசிய வாசிப்பு மாத செயற்பாடுகளின் பயனாக இச்சஞ்சிகை மலர்கிறது.

எழுத்து ஒரு கலையெனில் வாசிப்பு அதன் மறுகலை எழுதத் தூண்டும் எண்ணங்கள் போலவே வாசிக்கத் தூண்டும் எண்ணங்களும், எழுத்தும், வாசிப்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை.

நான் எழுத்தாளனல்ல, தீவிர வாசகி

வகைவகையாகவும் தொகை தொகையாகவும் நூலகத்தில் தேங்கிக் கிடக்கும் நூல்களை வாசிக்கும் வாசகர்கள் அருகிவரும் சவாலானதொரு காலகட்டத்தில் நூலகராக எனது பணியை மேலெடுத்துச் செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலை.

இந்த எண்ணக்கருவில் உருவான "தேசிய வாசிப்பு மாதம்" என்கிற திட்டத்தின்கீழ் வாசிப்பை ஊக்குவித்தல் என் தலையாய கடமையாக உணர்கிறேன்.

பிற்பட்ட பாடசாலைகள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து நூல்களை முதலில் அறிமுகம் செய்ய வேண்டும் என்கிற தொனிபலராலும் முன்வைக்கப்பட்டது. எனவே முப்பது நாட்களுக்கான வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக மாணவர்களையும், இளைஞர்களையும் இலக்குவைத்தேன்.

வாசிப்பென்பது இலத்திரனியல் மயமாகிக் கொண்டிருக்கும் ஒருகாலகட்டத்தில் நூல் வாசிப்பையும் பேணவேண்டியதொரு நெருக்கடி நிலை. காட்சி ஊடகங்கள், வானலை ஊடகங்கள் அறிமுகமாகுமுன் மக்கள் மத்தியில் வாசிப்பே பிரதான பொழுது போக்காகவும், அறிவின் வழி மனிதனை நகர்த்திச் செல்லும் பிரதான காரணியாகவும் திகழ்ந்தது. அறிவைப் பெறவும் பகிரவும் இதுவழிகோலியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பரீட்சைப் பெறுபேறுகளை மையப்படுத்திய (Result Oriented) கல்வி முறை மாணவர் மத்தியில் வேரூன்றிப் போன ஒரு காலகட்டத்தில் நூல்வழி அறிவை விருத்தி செய்யும் பண்புகளும் அற்றுப்போனது சோகம்தான். எனவே வாசிப்புப் பழக்கத்தை மாணவர் பக்கம் நகர்த்த வேண்டிய தேவையை ஒரு நூலகரென்கிற வகையில் என்னால் உணரமுடிகிறது.

ஏனெனில் எதிர்காலத்தில் அவர்களது நல்ல படைப்பாளியாக வேண்டுமெனில் ஒருவர் முதலில் நல்ல வாசகனாக வேண்டும். மரபுவழி இலக்கியங்களிலிருந்து பல மாற்றங்களுக்கு ஏற்ப இலக்கியம் கால ஓட்டத்தில் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டியது தேவையிலுள்ளது. என்பதை இளஞ்சந்ததி புரிந்து கொள்ளுமா?

நமக்குள் வாசிப்பு ஏற்படுத்தும் சீரிய செவ்வழிச் சிந்தனைப் பரிணாமங்களை நாம் உணர வேண்டும். வாசிப்பை ஓர் கோட்பாட்டுச் சிந்தனையாக்கிச் செயற்பட வைக்க வேண்டியதை என் தலையாய கடமையாக உணர்கிறேன்.

மாற்றுச்சிந்தனைக்கு நாம் தயாரா...? எனில் வாசிப்பை நேசிப்போம்.

த.சிவராணி
நூலகர்
பொது நூலகம்
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உள்ளே.....

பக்கம் பொருளடக்கம்

01. பாரதியும் நானும்
05. நல்ல மனோபாவத்தை வளர்ப்பது எப்படி ?
06. நம் செல்வங்கள்
08. எல்லாம்
14. கவிதை 1ம் இடம்
15. கவிதை 2ம் இடம்
16. கவிதை 3ம் இடம்
17. கவிதை 3ம் இடம்
18. புத்தகம்
19. நூலகமும் சமூகப்போக்கும்(கட்டுரை 1ம் இடம்)
20. நூலகமும் சமூகப்போக்கும்(கட்டுரை 2ம் இடம்)
21. கற்றல் செயற்பாட்டில் நூலகத்தின் பங்களிப்பு(3ம் இடம்)
22. மட்டக்களப்பு எழுவான்கரை படுவான்கரையின் விளக்கம்
25. The Strength of Vihitra
28. "Still Wating For You"
29. வந்தாறுமூலை மகா விஷ்னு ஆலய.....(ஆய்வுச்சுருக்கம்)
39. சுற்றுப்புறச் சூழல் மாசடைவதை தடுப்போம்
41. இன்றைய மாணவர்களின் நெறிதவறிய செயல்கள்
43. வாசிப்பின் அவசியம்
47. சின்னக் குழந்தையின் வேதனை (கதை உருவாக்கம் 1ம் இடம்)
49. வாசிப்பு மனிதனை உயர்த்தும் (கதை உருவாக்கம் 2ம் இடம்)
50. கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் .... (கதை உருவாக்கம் 2ம் இடம்)
51. கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் .... (கதை உருவாக்கம் 2ம் இடம்)
52. வாசிப்பு உயர்வு தரும் (கதை உருவாக்கம் 3ம் இடம்)
55. வாழ்க்கைப் பாடங்கள் (கதை உருவாக்கம் 3ம் இடம்)
56. நாயும் மனிதனும்
57. விஸ்வரூபம்
59. கிழக்கு மாகாண பொது நூலக ஊழியர்களின் ..... (ஆய்வுக் கட்டுரை)

மட்டக்களப்பு பொது நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாரதியும் நானும்

பாரதியார் எனக்கு முதலாம் வகுப்பில்தான் அறிமுகமானவர். சுசிலா ரீச்சர் தான் பெரிய மிசைக்காரரையும் தலைப்பா கட்டினவரையும் கறுத்த கோட் போட்டவரையும், தர்பாஜி மாதிரி வேட்டி கட்டியவரையும் காண்பித்தார். படிப்பித்தாரோ பாடல்பாடியாடினாரோ ஞாபகமில்லை.

"ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

இப் பாடலைப்பாடி எல்லோரும் பாடி, ஆடி, அசைந்து விளையாடி திரிந்த காலம் பசுமரத்து ஆணி போல என்றும் என் மனதில் ஊசலாடுகின்றது. என் பள்ளிக்கூடம் சிசிலியா பெண்கள் பாடசாலையின் முன்பக்க கத்தா மரத்தடியில்... காலம் கடந்த நாட்கள் எனக்கு பாரதியாரின் கண்கள்தான் அச்சத்தை ஏற்படுத்துவதுண்டு. எதையோ சுட்டு வீழ்த்துவது போல் இருக்கும். என்சக தோழிகூட பாரதியார் வேசம் போட்டு பரிசளிப்பு விழாவில் மிடுக்காக வந்து கவிதைகள் சொல்லும்போது ஐந்தாம் வகுப்பை கடந்து விட்டேன். பின் உயர்தரம் படிக்கும் காலத்தில் பாரதியார் கவிதைகள் எனக்கு கிடைத்தது அப்போதே எனக்கு விருப்பமான புத்தகமாக அது மாற தொடங்கியது.

நான் கல்கி, சாண்டிலியன், ரமணிச்சந்திரன் வாசகியாக இருந்த காலத்தில் பாரதியார் கவிதைகள் வித்தியாசமான கவிதையாகின. அது ஓடி விளையாடு பாப்பாவில் தொடங்கினாலும் பெண் விடுதலை, தன்னம்பிக்கை, காளிமீது கொண்ட பக்தி என்பனவற்றை பாரதி புகட்ட தொடங்கியதாலோ என்னவோ தெரியவில்லை "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா என்ற பாரதியின் கவிதை பாடலாக ஒலிக்கும்போது அதுவா...? அது ஒரு மிதப்பை தரும்(நான் வழமையாக வானொலி பிரியை அது எப்போதும் என் தலைமாட்டில் இருக்கும் வளர்ந்த காலத்தில் வானொலி என் உற்ற நண்பன். எனக்கான துணை அது பற்றி பின்பு எழுதயோசிக்கின்றேன்)

இன்னொரு பாடல் ... "நல்தோர் வீணை செய்தேன் அதை நலன்கெட புழுதியில் எறிவதுண்டோ" அந்தப் பாடல்தான் எனக்கு முணுமுணுப்பை தரும் பாடல். பாரதியின் உச்சமான பாடலாக எனக்குப்படும். மொத்தத்தில் மகாகவி பாரதியாரின் கவிதைகள் பெரும்பாலும் பிடித்தவை தாம் ஆனால் ஒவ்வொரு சமயத்திலும் ஏதாவது ஒரு கவிதை அல்லது அது ஒரு பாடலாக மாறிய தருணம் எனக்கு பிடிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
இச்சகத்துளோரெலாம் எதிர்த்து
நின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே"

இந்த கவிதைதான் என்னை தனிமையில் வாழும்போது தைரியத்தை தந்த கவிதை. நான் சோர்ந்து விழும் போது கவலையடையும்போது ஒரு மந்திரமாக "அச்சமில்லை அச்சமில்லை" --- கவிதை என்னை உஷ்ப்பி எழச் செய்கின்றது. என்னைப்போல் தனித்த பெண்களுக்கு இது ஒரு துணையாக, யானைப்பலமாக கூட நடைபோட செய்திருக்கும்.

நான் வெளிவாரி பட்டதாரியாக படிக்கின்ற காலத்தில் 'குயில்"பாட்டை கொஞ்ச காலம் திரும்ப திரும்ப வாசித்தபடி பிரத்தியே வகுப்பில் சாரூமதி ஆசிரியை தமிழ்மொழியை அழகாக கற்பித்தார். "குயில்பாட்டு" என்பது காதல் மற்றும் கற்பனையை மையமாக கொண்ட ஒரு கவிதை. 1914ல் எழுதப்பட்டது.. பாரதி இறந்த பின் 1923ம் ஆண்டு வெளியிடப்பட்டது. சாரூமதி ஆசிரியை "நான் இறந்த போது தான் எல்லாம் வருமோ தெரியல்ல" என்பார்.

"குயில்" என்றுதான் பாரதி பெயர் வைத்தாரா? பாரதிக்கு கண்ணம்மா மீது பெரும்காதல். அதனால் தான் குயிலை எழுதியிருக்க வேண்டும். இந்த கவிதை குயில், குரங்கு , எருது ஆகிய பாத்திரங்கள் வழியாகக் காதலை விபரிக்கின்றது. என் பாடப்பரப்பில் இப்படித்தான் கற்றுக் கொண்டேன். (உள் தலைப்புக்கள்)

1. குயில்
2. குயிலின் பாட்டு
3. குயிலின் காதற் கதை
4. காதலோ காதல்
5. இருளும் ஒளியும்
6. குயிலும் குரங்கும்
7. குயிலும் மாடும்
8. நான்காம் நாள்
9. குயில் தனது பூர்வ ஜென்ம கதை உரைத்தல்

இந்த குயில்பாட்டு என்னை ஒவ்வொரு பிரிவிலும் நிரந்தரமாக கவர்ந்ததை உங்களுக்கு செல்லித்தான் ஆக வேண்டும். மனதில் துளிர்த்தும், இளமைக்காலமும் ஈர்பான காலமல்ல அது---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

1. குயில்

"இக் குயில் பேட்டை என்றும் பிரியாமல் காதலித்துக் கூடி கலியுடனே வாழலாமோ நாதக் கனலினிலே நாம் உயிரைக் போக்கோமோ"

இந்தக் கவிதை வாசிப்பவரை எங்கேயோ இழுத்துச் செல்லும். கூடிக் களிதலை சுவைத்தும் தித்தித்தும்

2. குயில் பாட்டு

காதல் காதல் காதல்
காதல் போயின்
சாதல் சாதல் சாதல்
கூடல் கூடல் கூடல்
கூடிப் பின்னே குமரன் போயின்
வாடல் வாடல் வாடல்

எவ்வளவு விபரமான வரிகள் எங்களை வளப்படுத்தும் சொற்கள். காதல் அது சாதல்தான்.

3. குயிலின் காதல் கதை

"பேடே திரவியமே பேரின்பப் பாட்டுடையாய் பீழை உனக்கு எய்தியது என் பேசாய்...."

இதைவிட விசாரிப்பும் ஆறுதலும் எந்தக் கவிஞனால் கூற முடியும்? மாயச் சொல் கூற மனம் தீயுற்று நின்றேன். காதலை வேண்டிக் கரைகின்றேன். இல்லை எனில் காதலை வேண்டித் தவிக்கின்றேன். காதலில் சிக்குப் பட்டவர்களுக்கு இது ஒரு ஔடதம்தான் இந்த வரிகள் என்றால் மிகையாகாது.

4. காதலோ காதல்

"நாள் ஒன்று போவதற்கு நான் பட்டபாடு அனைத்தும் தாளம்படுமோ தறிபடுமோ யாரறிவார்?" நாள் ஒன்று போயினது நானும் எனது உயிரும்.

என்று தொடரும் வரிகள் காதலில் விழுந்தவருக்கு சொல்லும் பாடல்

5. குயிலும் குரங்கும்

"சிந்தக் கருதி உடைவாளில் கை சேர்த்தேன்...."

"தப்புமோ மையல் தடுக்கும் தரம் ஆமோ மண்ணில் உயிர்க்கும் எல்லாம் தலைவர் என மானிடரே"

6. இருளும் ஒளியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"பேணும் மனை வந்தேன் பிரக்ஞை போய் வீழ்ந்து விட்டேன்
மாலையிலே மூர்ச்சை
நிலை மாறித் தெளிவடைந்தேன்"

7. குயிலும் மாடும்

"நெஞ்சில் அனல் கொண்டேன் குமைந்தேன் குமுறினேன் மெய் வெயர்த்தேன்."

8. நான்காம் நாள்

"வான் காதல் காட்டி மயக்கிச் சதி செய்த பொய்மைக் குயில் என்னைப் போந்திடவே கூறிய நாள்"

9. குயில் தனது பூர்வ ஜன்மக் கதை உரைத்தல்

1. பக்கத்தில் வந்து பளிச்சென்று உனது கன்னம்
செக்க சிவக்க முத்தமிட்டான் சினம் காட்டி

2. பூரிப்புக் கொண்டாய் புளகம் நீ
எய்திவிட்டாய்
வாரிப் பெருந் திரைபோல் வந்த மகிழ்ச்சியிலே
நாணம் தவிர்த்தாய் நனவே தவிர்ந்தவளாய்

வாசிக்க வாசிக்க குயில் பாட்டை இழுத்துப் போகும். என்னை அதிலிருந்து விடுபடாமல் அமிழ்த்தும், என்னை பதப்படுத்தியதும் குயில் தான். பட படக்க வைத்ததும் குயில்தான்.

இப்படி எனக்குள் உறங்கிக் கொண்ட பாரதி. பாரதி படம் பார்த்தபின் அவர் மேலிருந்த உயர்வு சற்று குறைந்தாலும் இப்போதும் மேடையில் பேசும்போதும் பாரதி கவிதைகள்தான் நிறைகின்றன. எனவே மாணவர்களே! பாரதியின் கவிதைகளை படிக்க வேண்டும். அப்போதுதான் உங்களில் தைரியம் பிறக்கும். பெண் பிள்ளைகள் மகாகவி பாரதியோடு பயணிக்கும் போதுதான் தைரியம், நம்பிக்கை, தீமையை எதிர்த்தல், வீரம், நியாயத்திற்காக போராடும் குணம் எனப்பலவற்றைப் பெறுவர். விட்டு விடுதலையாகி வீரியம் பெறுவீர்.

த.சிவராணி
நூலகர்
பொது நூலகம்
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நல்ல மனோபாவத்தை வளர்ப்பது என்றால்?

வெற்றி எண்ணங்கள் வெற்றியைத்தரும். சித்தி எண்ணங்கள் சிறப்பைத் தரும். தோல்வி எண்ணங்கள் தோல்வியைத் தரும். துன்ப எண்ணங்கள் துன்பத்தைத் தரும். நான் எல்லா கருமங்களிலும் வெற்றி அடைவேன் சித்தி பெறுவேன் சிறப்படைவேன் உயர்வடைவேன் உத்தமனாக சேவை ஆற்றுவேன் என்று மீண்டும் மீண்டும் எண்ணி எண்ணி வெற்றி மனப்பாங்குடன் கடமை ஆற்றினால் எங்கும் வெற்றி எதிலும் வெற்றி எடுத்த காரியங்களில் எல்லாவற்றிலும் வெற்றியே வந்து சேரும் உங்களிடத்தில்.

துன்பம்தான், துயரம்தான், தோல்விதான், முடியாது, இயலாது, தெரியாது எனும் தோல்வி மனப்பாங்குடன் கடமையாற்றினால் யாது அடைவோம்? துன்பத்தை, துயரத்தை, தோல்வியை, பிரச்சினையை, சூழ்நிலையை எதிர்கொள்ளத் தெரியாத அவலத்தை அடைவோம். எக்காரியங்களை செய்வதானாலும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றும் தூய்மையாக இருக்க வேண்டும். இதில் நமது மனதில் உதிக்கும் எண்ணங்கள் முக்கியம் பெறுகின்றன. நல்ல மனோபாவத்தை வளர்க்க தவறுவதாலேயே ஒரு சிலர் சமூதாயத்தில் இழிநிலையை அடைகின்றனர்.

நாம் எக்கருமத்தினையேனும் சிறப்பாக ஆற்ற வேண்டுமெனில் அதில் உன்னிப்பாக கவனம் செலுத்த வேண்டும். அக்கறை, ஆர்வம், முழுமையான ஈடுபாடு இல்லாமல் எதையேனும் செய்தால் தோல்வியே அடைவோம். கடமைக்கு செய்ய வேண்டாம். கடமையைச் செய் எனும் மனநிலையை வளர்க்க வேண்டும்.

செய்யத்தக்க அல்ல செயக்கெடும் செய்யதக்க செய்யாமையானுங்கெடும்.

Kandeepan Adchara
Grade 09
BT/Vincent Girls' High School

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நம் செல்வங்கள்

சிறுவர்களே நம் நாட்டின் செல்வங்கள் அவர்களே ஒவ்வொரு வீட்டினதும் சொத்துக்கள் அவர்களே வருங்காலத்தில் நம்நாட்டை கட்டியெழுப்பும் சிற்பிகள். அவர்களை நாம் அன்போடும், பண்போடும் பாதுகாத்து நல் மனிதர்களாக்கி, தீயவழிகளில் செல்லவிடாது ஆதரவு கொடுத்து வளர்த்தெடுப்போம்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்பதற்கு இணங்க அன்னை மட்டுமல்ல தந்தையும் சேர்ந்து அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். (பிறரின் தலையீடின்றி பாதுகாப்பு பெறும் உரிமை அவர்களுக்கு உண்டு.) அரசு குழந்தையின் அடயாளங்களையும், அடிப்படை உரிமைகளையும் பாதுகாத்தல் வேண்டும். பேனா எனும் வில்லெடுத்து எழுத்து எனும் அம்புகளால் சிறுவர் பாதுகாப்பிற்காக போராடுவோம்.

"குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று குற்றங்களை மறந்து விடும் மனத்தால் ஒன்று நடந்ததெல்லாம் நினைப்பது தான் துயரம் என்று ஞானிகளும், மேதைகளும் சொன்னார்கள் அன்று" என்னும் பழங்கால பாடல் வரிகளைப் பாருங்கள். குழந்தைகளின் உள்ளம் எப்படிப்பட்ட கள்ளமில்லாத வெள்ளை உள்ளம் என்பது விளங்கும். அவர்களும் பாதுகாப்பாக இருந்து அவர்களின் உரிமைகளைப் பெற்றெடுப்போம்.

நம் நாட்டை இப்பொழுது போதை என்னும் அரக்கன் விழுங்கிக் கொண்டிருக்கின்றான். அதில் எமது சின்னஞ்சிறு சிறார்கள் வீழ்ந்து விடாமல் இருக்க அவர்களின் சிந்தனையில் நல்ல எண்ணங்களை விதைப்போம். தெய்வ வழிபாட்டினும், அறநெறிகளிலும், தியானச் செயற்பாடுகளிலும் நம் சிறுவர்களை ஈடுபடுச் செய்து நம் நாட்டிற்கான நல்ல பிரஜையாக உருவாக்குவது நமது கடமையாகும். பெற்றோர்களும் எந்நேரமும் தொலைபேசியிலும், தொலைக்காட்சியிலும் மூழ்கியிருக்காமல் நல்ல அறிவுடைய புத்தகங்களை தாங்களும் படித்து பிள்ளைகளின் சிந்தனையை நல்வழியில் செல்ல முன்னுதாரணமாக ஊக்குவிக்க வேண்டும். நாட்டில் கிடைக்கும் சமூகப் பாதுகாப்பின் அனுகூலங்களைப் பெறும் உரிமைபிள்ளைகளுக்கு உண்டு.

அன்பான வழி நடத்தலே நம்பிள்ளைகளை நல்வழிக்கு கொண்டு செல்லும் என்பதே உண்மை. கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு போன்றவற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும் போது குழந்தையின் அறிவு, தன்னம்பிக்கை, படைப்பாற்றல் போன்றன வளர்ச்சி அடையும். அடிக்கடி சண்டைகள் விவாதங்கள் நிறைந்த குடும்பத்தில் வளரும் குழந்தைகள் பல்வேறு இன்னல்களை சந்திப்பதுடன் அவர்களது எதிர்காலமும் சிக்கல் மிகுந்ததாக அமையக்கூடும்.

பிள்ளைகளை நல்வழிப்படுத்துவதற்கு முன்னர் பெற்றோரும் உற்றார் உறவினரும் சண்டைகள் பிரச்சினைகள் இல்லாமல் வாழ வேண்டும். அதுவே நாம் அவர்களுக்குச் செய்யும் கடமையும், கடனுமாகும். ஒற்றுமையாய் வாழ்வதனால் வளர்ந்திடும் நன்மையே, வேற்றுமையை வளர்ப்பதனால் என்றென்றும் வளர்வது தீமையே ஆகும்.

ஆகவே நாமும் நல்வழியில் சென்று எமது குழந்தை செல்வங்களையும் கண்ணும் கருத்துமாக அன்புடன் பேணிப் பாதுகாத்து நல்வழிப்படுத்துவோமாக.

திருமதி. சாரதாதேவி குமாரசாமி
பொது நூலக வாசகர்
பாரதிலேன், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எல்லாம்

கணக்குப்பார்த்தே
நாட்களைக் கடத்த வேண்டியிருக்கிறது
சூனியத்தின் உருண்டையில்
உறங்குகிறது வரி
நம் இதயத்தைப் பதப்படுத்துமா?

கேள்விகளும்
நிராசைகளும்
உதிரும் பூக்களாக.....
கருகுவதுதான் மிச்சம்

மாயத்தின் எல்லையும்
ஆச்சரியத்தின் கணப்பொழுதுகளும்
விரிந்து.... விரிந்து.....
மூட்டைப்பூச்சியாய்
இரத்தத்தை உறுஞ்சுகின்றது
அதிகாரக் கரங்களில்
வீழ்த்தப்பட்ட மாங்காய்
இப்போ மெல்ல....மெல்ல...
இருள் அகழ்கிறதா?

சற்றுமுன்
கோவி சொன்னான்
ஒவ்வொரு தலைக்கும்
விலைமதிப்பிடப்பட்டு
வட்டிகள் குட்டிபோடும்
சூனியக் கற்றையில்த்தான்
நாம் நடக்கின்றோம்

எல்லாம் அதிகரிக்கப்பட்ட காலத்திலிருந்து.....
மூச்சுவிட முடியாத காலத்திலிருந்து.....
சற்று சுவாசம்
இயக்கம் கொள்கின்றது.

இருள் மேகம் சற்று விலகுவதாக
கோபி சொல்கிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதிரம் சொட்டுச் சொட்டாக வழிந்து
எனக்கு எலும்பும் தோலும்தான்
மிச்சமாயிருக்கிறது.....
என்ன செய்வேன்?
ஆயிரம் ரூபா மயில் தாள்
பொக்கட்டுக்குள்
சிரித்த காலத்தில்
சந்தையில் எல்லாம் வாங்கி
மீண்டும் பொக்கட்டுக்குள்
சில தாள்கள் இருக்கும்
அப்போ

தங்கம் பவுண் பத்தாயிரம் ரூபா
பெற்றோல் லீற்றர் ஐம்பது ரூபா
கை துடைப்பான் கூட இருபது ரூபா
மயில் பறக்காது
சோற்று உருண்டை
தொண்டைக்குள் சிக்காது
மீன்கள் கிலோவாகாது
'சொப்பின் பேக்' நிறைந்த காலம்
கொச்சிக்காய் வெங்காயம்
சில்லரைக்காசில் கரையும்
என் கால்கள் நடுங்காது
என் கைகள் உதராது
வயிறுபெருத்து
உருண்ட திரண்ட தேகம்
என்ன கவலை?அப்போ?

வெடிச்சத்தம் கொஞ்சம் கேட்கும்
அதற்கு பழகிப் போயிற்று.....
வயிறு பத்தாது
வயிற்றெரிச்சல் இருக்காது
முகம் சிதைந்து
கோரமாய் வளர்ந்து
பட்டினிச் சாவில்லை,

கோபி சொன்னான்
எல்லாம் கொஞ்சக்காலம்தான்
சாமான் கொஞ்சம் கொஞ்சமாய் குறையுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிம்மதி பெருமூச்சு
என்னில் சிறுதுளியாய் தெரிந்தது
முட்டை நூறு ரூபாய்க்கு மூன்று
முன்னூற்றி ஐம்பது விற்ற,
கை துடைப்பான் எண்பது ரூபாய்
பெற்றோல் விலை இருநூற்றி தொன்னூற்று நான்கு ரூபாய்

குறையும் குறையும்
உருவி எடுத்த தரகர்களை
சரிப்படுத்திய பின்
எல்லாம் குறையும்

என் மீது எனக்கு நம்பிக்கை பிறக்க
ஒற்றைக்காலில் நின்றேன்
கொக்கு போல் தான்..... நான்.
தங்கத்தின் நிலவரம் எனக்கு
நாலு இலட்சத்தை தாண்டிவிட்டது
அமைதியாகக் கிடந்த
இதயக்கல் வீங்கி வீங்கி
கொக்கை நினைத்து
உறக்கம் கொள்கிறது

கோபி சொன்னான்
உலக வர்த்தகத்தில் ஏற்ற இறக்கம்
2028ல் தங்கம் குறையும்
டொலர் பெறுமதி கூடினால்
தடாரென தங்கம் விழும்
அதுபோல்,
கார், வேன், பஸ் எல்லாம் குறையும்

நெடுங்கனவு ஒன்று கண்டது போல்
எல்லாத்திசைகளிலும்
ஓங்கி அறைகின்றது காற்று
பால் வெளியில் தூதர்கள்
நடந்து திரிவது.....

எனக்கு மட்டும் தெரிகிறது
நல்லது நடக்கட்டும்
நல்லவர்கள் மீட்பராகட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொட்டடியில் கிடக்கும்
அந்துக்களை மீட்கட்டும்
கோபியின் முகம்
பெருவெளியாக மலர்கின்றது
சாமான் 'லிஸ்ட்'
நீண்டுதான் போயிற்று
"கடைக்கா சாமான்"
குரல் ஒன்று அறுந்து விழுந்தது

நானே ஒரு கடை
எனைக்கொரு கடையா
திண்டு சாகப் பிறந்தவன் நான்
காசைப் பதுக்கி
மேனியைப் பாழாக்கி
உமிழ் நீரை அடக்கி
ஏதும் உண்ணாமல்
என்னத்திற்கு இந்த வாழ்வு?

பிள்ளைக்கு,
பிள்ளையிட பிள்ளைக்கு
தின்னாம உண்ணாம
சேர்த்து சேர்த்து
வட்டிக்குக் கொடுத்து
அது குட்டியும் போட்டு
பாவத்தை சேர்த்து
மண்ணாகிப் போகும்
ரகம் நானில்லை

ஏனோ தெரியவில்லை
சற்று நேரத்தால்
குரலும் அடங்கிற்று
இடியும் நின்றுத்து
நாற்பத்தெட்டாயிரம் ரூபா
சாமான் சங்கட்டின் விலை
குறையவில்லை குறையவில்லை
மனம் பதறியது.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கோபி சொன்னான்
போனமுறை ஐம்பத்தெட்டாயிரம்
இந்த முறை,
பத்தாயிரம் குறைந்திருக்கு
புருவம் உயர்ந்தது
யாருக்கு சேமிக்கனும்?
யாருக்காக வயிற்றைக்
கட்டனும்?

கோபி சொன்னான்
கள்ளர்கள் கூடிவிட்டார்கள்
கவனம் தேவை
கழுத்துக் கவனம்
கையும் கவனம்
காது கவனம்.....
வெளியில் எதுவும் நடக்கும்
கவனம்..... கவனம்.....
எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான்
திகைத்தேன்
பயத்தின் எல்லையைக் காணவில்லை.
ஆனால் அது நீடிக்கவில்லை...

வீட்டவந்தநேரம் முழுவதும்
கோதாரி மழை.....
ரேடியோ, ரீவி, செல்போன் முழுவதும்
"டிட்வா" புயல் சேதி.....
"கண்டி தாண்டுத்தாம்"
"கம்பளையும் அமிழ்ந்திட்டாம்"
மலை நாடு முழுவதும் சோகம்
மரண ஓசை.....
உயிர்களைப் பறிகொடுத்து
பரிதவிப்பு.....
வீடில்லை.....
வாசலில்லை.....
இருக்க இடமில்லை....
டிட்வா புயலின் ஆவேசம்
ஆனால் ஒரு கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அனுராவின் அறிவிப்பால்
ஆர்ப்பாட்டம் அதிகரித்துத்தோ.....
இனி விலை கூடுமோ?
கக்கிசம் கூடுமோ.....
ஒன்றும் சொல்ல முடியவில்லை
ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும்
நம் இதயத்தில் ஏதோ ஒன்று கட்டப்படுகின்றது
வெற்றியும் தோல்வியும்
வெள்ளத்தின் அலையினால் அள்ளுண்டு போகும்
காலத்தின் நீட்சியை
நம் ஒவ்வொரு செதில்களிலும்
சொருகப்படுகின்ற
சேதிகள்
புதினங்களாக
ஆச்சரியங்களாக
துயரங்களாக
கூடுகட்டுவதுதான் மிச்சம்

சோற்றுக்கான எல்லா
போராட்டங்களும்
தோற்றுவிட்டு
கடல் கடந்து
கையேந்தி நிற்கும் எங்களை
மிதித்து போகும்
அசுரக்கரங்களை
நாம் இன்னும்
கணக்கில் எடுத்துக்கொள்ளாமல்
எங்களையே நாம் மிதித்தெழுகிறோம்
எங்களையே நாம் கொண்டாடுகிறோம்
எல்லாம்.....
எல்லாம்.....

த.மலர்ச்செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் 1ஆம் இடம் பெற்ற கவிதை

மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்

புத்தகம் தான் நம் நட்பு தீபம்
மூளைக்குத் தரும் அளவில்லா வீரம்
நம் மூச்சிலே ஓடுகிறது வாசிப்பின் சீரம்
மறுமலர்ச்சிக்காக வாசிப்போம் தீரம்!

ஆஞ்ஞானம் என்னும் அக இருளை நீக்கி
மெஞ்ஞானம் என்னும் பேரொளியை தந்து
எக்குடியில் பிறப்பாராயினும்
அறிவைப் புகட்டும் தெய்வம்!

கண்ணில்லா அருள்விளியும்
வாய்பேசா மனிதனையும்
விலங்கியற்கை இல்லாது இவ்வையகத்தில்
முழு மனிதனாக்கும் சிந்தாமணியாம் வாசிப்பு!

கண்ணைக்கட்டி காட்டில் விடும் பூனையை போன்று
நாவினை சுட்டு தெரியும் அரக்கர்களை
இத்தரணியிலே நல்வாழ்வு வாழ வைக்க
உதவுகின்ற அகவிளக்காம் வாசிப்பு!

மனிதர் உணர்ந்து கொள்ளும்
மனிதக் காதலையும் தாண்டி
புனிதமான நூல்களையெல்லாம்
வாசித்திடுவோம் புது வாழ்வுக்காக!

ஐரோப்பாவில் ஏற்பட்டதாம் புதியதொரு மலர்ச்சி
அதையே சொல்லிவிடுவர் மறுமலர்ச்சி என்று
மீன்பாடும் தேன் நாடாம் மட்டுநகரின்
பொது நூலகத்திலும் ஏற்படுத்துவோம் மறுமலர்ச்சி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் 2 ஆம் இடம் பெற்ற கவிதை

மறுமலர்ச்சிக்காய் வாசிப்போம்

அறிவுக்கு விருந்தே வாசிப்பு...
நம் வாழ்வின் விளக்கே வாசிப்பு
வாசிப்பினாலே மனிதன் ஒருவன் பூரணமடைகிறான்
இது சான்றோர் வாக்கு.

கல்வியின் கதவுக்கு வாசிப்பு திறப்பாகும்
கல்வியின் அத்திவாரமும் வாசிப்பே
வாசிப்பால் உலகை வென்றிடுவோம்
கற்போம் வளர்ப்போம் உலகையே மாற்றிடுவோம்

எழுத்துக்கள் என்பது முத்துக்கள்
முத்துக்களை கோர்வையாக்குவதே வாசிப்பு
செந்தமிழை இனிமையாக்க வாசித்து
உலகில் மறுமலர்ச்சியை உண்டாக்குவோம்.

தமிழுக்கு அமுது என்று பேர்
அந்த தமிழை இனிமையாக வாசித்தால்
நம்மை விட பாக்கியம் செய்தவர் இவ்வுலகில்
எவரும் இல்லை . இதையே நீ நோக்கு

எழுத்துக்கள் முத்துக்கள் போன்றது
சொற்கள் முத்துக்கள் எல்லாம் விளையும் இடம்
கல்வியில் சிறந்தவன் இதையே நாடுகிறான்
அவனும் வாசிப்பாலே பூரணம் அடைகிறான்.

பூவுலகம் வாசிப்பதையே முதற்கொண்டது.
இருளை நீக்கி வெளிச்சத்தையே தருவது வாசிப்பு
வாசிப்பே நம் வாழ்வின் சுடர் விடும் தீபம்.
மறுமலர்ச்சிக்காக வாசிப்போம். வாசிப்பால் ஒன்றினைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் 3 ஆம் இடம் பெற்ற கவிதை

மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்

நூலகமே! புத்தகங்களை நேசிக்கும்,
புத்தகங்களே! வாசிப்பதை நேசிக்கும்,
வாசிப்போ! உன்னை நேசிக்கின்றதே,
அதை நீ, நேசிக்க மாட்டாயா?

காகித பக்கங்களை கருத்தாய் வாசி,
வாசிப்பதை அன்போடு நேசி,
உலகம் உன்பெயர் பேச,
நீ அறி வாசிப்பெனும் பாச,

பாரதியின் சிந்தனைகளை அறிய!
கேள்வியின் விடைகளை புரிய!
மூழ்கிவிடு, நூலகம் எனும் கடலில்

நூலகம் எனும் பூஞ்சோலை மணக்க,
வாசிப்பெனும் இனிப்பு இனிக்க,
வெறுக்குமோ! உன் மனம்
இவற்றையெல்லாம் அனுபவிக்க?

நம்மில் ஏற்பட வேண்டும் மலர்ச்சி!
வையகத்திற்கு வேண்டும் எழுச்சி!
வாசிப்பு எனும் யாகத்தில்,
தீயாய் கொழுந்து விட்டு எரிய,
வாசிப்போம்! வளம் பெறுவோம்! மறுமலர்ச்சியடைவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் 3 ஆம் இடம் பெற்ற கவிதை

மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்

மறுமலர்ச்சிக்கான வாசிப்பு மண்ணில் உதிக்கிறது
மண்ணின் செல்வம் போல் அறிவைத் தருகின்றது
அழியாச் செல்வம் அது அறிவின் நெருக்கம்
அவ் வாசிப்பால் கிடைக்கும் நன்மைப் பெருக்கம்

காலம் மாறினாலும் வாசிப்பு மாறாது
கற்றல் வழியில் புத்தகம் தாழாது
வாசிப்பதால் வாழ்வில் வெற்றி அடைவான்
வானத்தின் உயரத்தைப் போல் பறப்பான்
நிசத்தமான வாசிப்பு அது நிம்மதி தந்திடும்
நெஞ்சம் நிறைவுறும் பலமொழி தந்திடும்
துன்பத்தில் துணை நின்று துயர் துடைக்கும்
தோழமை வாசிப்பு எமக்கு தொண்டாற்றும்.

அறிவுமலர் இதழாய் கிடைக்கும் இடம்
அந்த வாசிப்பால் மனம் நிறைவு அடையும்
இரவிலும் பகலிலும் மதியில் துணைநிற்கும்
இனிமை சொற்களாய் எம்மை இன்பப்படுத்தும்.

வாசிப்பின் வளத்தினை பூமியில் நிலைத்திடுவோம்
புதுமைத்தீபம் நெஞ்சில் ஏற்றி அறிவு சுடரை ஒளிரவிட்டிடுவோம்
புத்துணர்வோடு புத்தகங்களை வாசித்திடுவோம்
புன்னகை சிந்தியே புதுமலர்வினைப் பெற்றிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புத்தகம்

அரிச்சுவடியாக அறிமுகமானது
பாடங்களாக பரிட்சயமானது
கதை சொல்லி நெருக்கமானது
உலகம் விரித்து கண்முன் தந்தது
அறிஞர் கூட்டம் அறியச் செய்தது
மூக் காலமும் கண்முன் கொண்டுவந்தது
இடம்பெயர்ந்திட இடம் கொடுத்தது
கலைகள் அனைத்தும் கல் என நின்றது
படிக்கும் பொழுதுகள் என் விழுதுகள் ஆகும்
அவைதரும் தீர்வால் என் விழுதுகள் ஆடும்
எனக்குள் பல பல விதைகள் தூவும்
விதைகள் முளைத்திட உதவிகள் ஏவும்
சத்தமின்றி அவை வித்தைகள் நிகழ்த்தும்
தனியாது என்றும் புத்தகம் மீதான தாகம்
புத்தகம் ஆனது என் சுவாசத்தின் பாகம்!

சி.வக்ஷிகா
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நூலகமும் சமூகப்போக்கும்

"கற்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே மேல்" எனும் அறிஞர் பிளாட்டோவின் கூற்றுக்கிணங்க மனிதர்களாகிய நாம் கற்காமல் வாழும் வாழ்க்கையை விட ஒரு போதும் பிறக்காமல் இருப்பதே மேலானது.

கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவதன் மூலமே ஒரு மனிதன் தன்னைப்பற்றியும் தனது சமூகத்தைப்பற்றியும் அறிந்து ஒரு முழு மனிதனாகவே பூரணமடைகின்றான். கற்றலின் போது அதிலிருந்து முக்கிய பகுதியை தேர்ந்தெடுக்கின்றோம். அதுவே வாசிப்பாகும். பாமரரும் பண்டிதரும் வாழ்ந்த அக்காலத்தில் கற்றலைவிட புத்தகம் வாசிப்பதே மேலோங்கி இருந்தது. ஆனால் தற்காலமோ அதற்கு மாறானது. எங்கு சென்றாலும் கையில் பனுவலோடு சுற்றும் மனிதன் தற்போது தொலைபேசியும் கையுமாக திரிகிறான்.

முன்னைய சமூதாயம் வாசிப்பை ஊக்குவித்தது, நேசித்தது, ஆனால் தற்போதைய சமூதாயம் அவ்வாறல்ல. நூலகத்திலே புத்தகத்தின் முன் உறைந்து கிடக்கும் மனிதன் தற்போது தொலைகாட்சியின் முன் உறைந்தல்லவா கிடக்கின்றான். இவ்வாறே சமூகத்தின் போக்கு காணப்படுகின்றது. எங்கு பார்த்தாலும் வாசிகசாலையின் கதவுகள் தூசிபடிந்து மூடிக்கிடக்கின்றன. அவை தூங்குகின்றன. ஒரு மனிதன் வாசிப்பதால் பல பயன்களை அடைகின்றான். சிந்திக்க தெரிந்த மனித மனதில் ஒரு தவிர்க்க முடியாத அங்கமாக வாசிப்பு காணப்படுகின்றது.

உறங்கிக்கிடக்கும் நூலகக் கதவையும் உறைந்து கிடக்கும் மக்கள் சமூகத்தையும் மீளத்தட்டியெழுப்ப வேண்டும். "ஆயிரம் கோயில்களை கட்டிக்குமிக்காது ஒரு நூலகத்தை கட்டுங்கள் பயன் கிடைக்கும் " என்றார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். "ஒரு ஊரில் ஒரு நூலகம் திறக்கப்படும் போது பத்து சிறைச்சாலைகள் மூடப்படும் " என்கிறார் சுவாமி விவேகானந்தர். ஆகையால் இத்தகைய பயனைத்தரும் நூல்நண்பர்களையும் அவற்றை ஈன்றெடுத்த நூலகத்தையும் பயன்படுத்தி மறுமலர்ச்சிக்காக வாசித்து பயனைப்பெறுவோம் நாமனைவரும்.

1ம் இடம்

தரம் - 07
ச.கிஷோறி
வின்சன்ட் மகளீர் உயர்தர பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நூலகமும் சமூகப்போக்கும்

இன்றைய காலகட்டத்தில் சிறுவர்கள் நூலகத்திற்குச் செல்வது மிகவும் அரிதாகக் காணப்படுகின்றது. தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக எம் இளம் சமூதாயம் இணையத்திற்கும் தொலைபேசிகளிற்கும் அடிமையாகிவிட்டது. இந்நிலையை நாம் இவ்வாறு நீடிக்கவிடக் கூடாது. ஆகவே சிறுவர்களை வாரத்திற்கு இரண்டு முறை அல்லது மூன்று முறை நூலகத்திற்கு அழைத்துச் சென்று அங்கே உள்ள பெறுமதி வாய்ந்த புத்தகங்களை வாசிப்பதற்குப் பழக்க வேண்டும். நூலகம் என்பது எமக்கு தரப்பட்ட ஒரு பயன்மிக்க வளம் ஆகும். ஆகவே நாம் பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டும்.

"ஒரு நூலகம் திறக்கப்படும் போது பல சிறச்சாலைகள் மூடப்படுகிறது"என்கிறார் சுவாமி விவேகானந்தர். இதன் கருத்து என்னவென்றால் ஒரு நூலகம் திறக்கப்படும் போது சமூகத்தில் குற்றச்செயல்கள் குறைவடையும். ஒழுக்கவிழுமியங்கள் வந்து சேரும். இன்று உலகில் உயர்ந்த நிலையிலுள்ள பலரும் நூலகங்களை பயன்மிக்க ஒரு வளமாகப் பயன்படுத்தியவர்கள்தான் நூலகங்களில் உள்ள புத்தகங்களை வாசிப்பதினால் மொழித்திறன் வளர்ச்சியடையும் கற்பனைத்திறன் அதிகரிக்கும், பொறுமை போன்ற நல்ல பண்புகள் எம்மில் சேரும், வாசிப்புத்திறன் விருத்தியடையும், பொதுஅறிவு விருத்தியடையும். இது போன்ற பல நன்மைகள் எமக்கு கிடைக்கிறது.

இன்றைய சமூதாயமானது இணையத்திற்கு அடிமையாகி விட்டது. இணைய விளையாட்டுக்கள் சிறுவர்கள் மத்தியில் பிரபல்யமடைந்து வருகின்றன. அவர்கள் பசி தூக்கத்தையே மறந்து அதில் ஒன்றி விடுகிறார்கள் இந்நிலை நீடித்தால் நம் சமூதாயம் எந்த நிலைக்கு தள்ளப்படும்? இன்றைய நவீன உலகில் தொழினுட்பவளர்ச்சி காரணமாக சிறுவர்கள் நூலகத்திற்கு வருவது "அத்தி பூத்தாற்போல" இருக்கின்றது. சிறுவர்கள் இணையத்தின் மூலம் கல்வி கற்கிறார்கள். அதுதான் அவர்களுக்கு கல்வி என்றாகிவிட்டது. ஆனால் மாணவர்கள் ஒரு நாளில் ஒரு மணிநேரமாவது நூலகத்தில் செலவிடவேண்டும்.

இன்றைய இளம் சமூதாயத்தினராகிய நாம் தான் நாட்டின் எதிர்காலத்தலைவர்கள். ஆகவே நாம் எமக்கு வழங்கப்பட்ட இந்த அரிய கொடையை பயன்மிக்கதாக பயன்படுத்தி எமது எதிர்கால சமூதாயத்தை புத்தகங்களையும், நூலகங்களையும் நேசிக்க வைப்போம். தலை குனிந்து என்னைப்பார் தலை நிமிர்ந்து உன்னை நடக்க வைப்பேன் என்கிறது ஒரு நல்ல நூல். ஆகவே நாமும் நூலகங்களிலுள்ள புத்தகங்களை வாசித்து நல்ல நட்சத்திரங்களாய் மிளிர்வோம்.

2ம் இடம்

தரம் - 07
நி.ஹரினி
வின்சன்ட் மகளீர் உயர்தர பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கற்றல் செயற்பாட்டில் நூலகத்தின் பங்களிப்பு

"உடுக்கை இழந்தவன் கை போல இடுக்கண் களைவதாம் நட்பு" என்பதற்கிணங்க நல்ல நட்பு என்பது தக்க தருணத்தில் உதவுவதாகும். ஆம் எம்வாழ்வியலை முன்னேற வழி செய்கின்ற நூல்களைப்போல ஒரு மனிதனுக்கு நல்ல நண்பன் என்று எவருமே இருக்க முடியாது. அறிவை வளர்க்கின்ற நெஞ்சத்தை விரிக்கின்ற நற்சிந்தனைகளை ஊட்டுகின்ற நூல்களே சிறந்த நண்பர்கள்.

இப்படிப்பட்ட நல்ல அறிவை ஊட்டுகின்ற நண்பர்களுக்கு ஒரு வீடு உள்ளது. அந்த வீடுதான் நூலகம். புத்தகங்களுடன் பொழுது கழியவும், கல்வியுடன் நட்புக் கொள்ளவும் அறிவை தனது தோளனாக்கிக் கொள்ளவும் எமக்கு நூலகமே துணைபுரிகின்றது.

ஆனால் இந்த நூலகத்தைப்பற்றி தெரிய இரு முக்கியமான இருவிடயங்கள் தேவை. மொழி மற்றும் வாசிக்கும் திறன். முதலில் நாம் மொழியைப் பற்றி நோக்குவோம். மொழி மனிதனுக்கு விழி போன்றது. விழி இல்லாமல் நாம் எவ்வாறிந்த உலகை பார்க்க முடியாதோ அது போலவே மொழி என்பதில்லாமல் உலகை விளங்கிக் கொள்ள முடியாது. மொழிகளின் படைப்பு என்பதே இறைவனால் படைக்கப்பட்டது. இதனையே "ஆதிசிவன் பெற்றுவிட்டான் என்னை ஆரியமைந்தன் என்போர்" என வரும் பாடல் இதை நன்கு விளக்கும் எது எவ்வாறாயினும் மொழிவழி வந்ததே எழுத்தறிவு. எழுத்தறிவின் வழியே வாசிப்பு என்ற தொரு அம்சமும் முளைவிட்டது.

இத்தகைய வாசிப்புப் பழக்கமே மனிதனை முழுமையடையச் செய்கிறது. இப்பழக்கம் மனித பண்பாடுகளிடையே காணப்படும் சிறப்பான பண்பு. மக்கள் வாழ்வியலில் அது தவிர்க்க முடியாத தொன்று.

வீட்டில் வரவேற்பறை , சுவாமியறை , படுக்கையறை என திட்டமிட்டு வாஸ்து பார்த்து கட்டும் நாம் ஏன் அதற்குள் நூலகத்தை தவிர்த்து விடுகின்றோம். உண்மையைச் சொன்னால் வீட்டை அலங்கரிக்கவும் அங்கிகரிக்கவும் புத்தகங்களை விட மேலானதும் சிறந்ததும் பயனள்ளதுமான பொருள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றே கூறலாம். எனவே "குஞ்சியழகும் கொடுத்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல " கல்வியில் உண்டாகும் அழகே உண்மையான அழகு கற்றலுக்கு நூலகத்தின் பங்களிப்பு மிக முக்கியம் நூலகத்தை பயன்படுத்தி பயன்பெறுவோமாக.

3ம் இடம்

தரம் - 07
அ.விகாஷ்னி
புனித சிசிலியா பெண்கள் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மட்டக்களப்பு எழுவான்கரை படுவான்கரையின் விளக்கம்

மட்டக்களப்பில் வாழும் மக்கள் என்றுமே தளம்பியதில்லை இங்கு வாழும் மக்கள் எல்லோரும் பாக்கியசாலிகளே! மட்டக்களப்பு எழுவாங்கரை, படுவாங்கரை என இரண்டாக பிளவுபட்டு தன்னகத்தே சிற் சில சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு வாழ் மக்களுக்கு "தலைமாட்டில் தயிர் பால் நெல் வகைகளும கால் மாட்டில் மீன் வகைகளும் கிடைக்கும்" என சிலர் விளையாட்டாகச் சொல்வதுண்டு இதற்குக் காரணம் இப்பிரதேசத்தில் தனக்குத் தேவையான தானியவகைகளை தானே உற்பத்தி செய்து தன்னிறைவு அடையும் வழமை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். தானியவகைகளான நெல், கச்சான், சோளம், பயறு, கௌப்பி, குரக்கன், எள்ளு போன்றவையும் கால்நடை வளர்ப்பு மூலமாக பால், தயிர், முட்டை போன்றனவும் ஆடு, மாடு, கோழி வளர்ப்பிலிருந்து இறைச்சி வகை பெறப்படுவதும் கடல் வளங்களிலிருந்து மீன்,இரால்,நண்டு.மட்டி போன்ற கடல் வாழ் உயிலினங்கள் பெறப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இதனாலே தான் மட்டக்களப்பார் கதை கேட்கமாட்டார்கள் எப்போதுமே திமிருடன் திரிவதற்கு இதுவே முக்கிய காரணம் ஆகும்.

எழுவான்கரை/இழுவான்கரை என்பது மட்டக்களப்பு கிழக்குக் கடற்கரைப்பகுதியை குறிக்கும் நீர்நிலைகளில் நீர் மட்டம் கூடினால் தேவைக்கு அதிகமாக வரும் நீரை இழுத்து ஓடிச்சென்று கடலினுள் சேரும் தரைத் தோற்றம் உள்ளதானாலேதான் இழுவான்கரை என்று கூறப்பட்டு வந்தது இது காலப் போக்கில் எழுவான்கரையாக மாறியுள்ளது இது வாழைச்சேனை கடற்கரைப்பகுதி தொடக்கம் அம்பாறை கடற்கரைப்பகுதி வரை இத்தரை தோற்றம் காணப்படுகிறது. இதற்கு மற்றுமொரு விளக்கத்தை பார்த்தோமானால் சூரியனானது கிழக்குத்திசையில் உதயமாகும் எனவே கிழக்கில் காணப்படும் கரையோரப் பகுதிகளை எழுவான் கரையென்றும் அழைக்கின்றனர். இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாழும் மக்கள் பெரும்பாலும் மீன்பிடி, வியாபாரம், வர்த்தகம், கடல்கடந்த வணிகம், முத்து மற்றும் இரத்தினக்கற்கள் வியாபாரம் போன்றவை இம் மக்களின் தொழில் முயற்சிகளாக உள்ளன அநேகமாக எழுவான்கரை மக்கள் வசிக்கும் பகுதிகள் நகர்ப்புறங்களாகவே காணப்படுகின்றன.

படுவான்கரை ஏரி மற்றும் உள்நிலப்பகுதி இதன் தரைத் தோற்றமானது வளைத்து வர வரப்பினால் கட்டப்பட்டு உள்ளுக்குள் இருக்கும் நிலப்பகுதியாகக் காணப்படும். இத் தரைத்தோற்றம் வயல்நிலங்களையும், தோட்டச் செய்கையும் இடம் பெறும் நிலப்பரப்பை குறித்து நிற்கின்றது. சூரியனை வைத்து பிரிக்கும் முறையை பார்துதோமானால் சூரியன் மறையும் மேற்குப் பகுதிகளைக் குறித்து நிற்கும். இங்கு வாழும் மக்கள் பெரும் பாலும் விவசாயம், மீன்பிடி மற்றும் தோட்டச் செய்கையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு வாழ் மக்கள் எழுவான்கரையாக இருந்தாலும் சரி படுவான்கரையாக இருந்தாலும் சரி பாரம்பரியத்தைக் கட்டிகாப்பதுடன் கிராமிய விழுமியங்களையும் இன்னமும் பேணிப்பாதுகாத்து வருகின்றனர். ஒரு சில கூத்துப் பாடல்கள் மற்றும் மட்டக்கப்பிற்கே உரித்தான பேச்சு வழக்குகளும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பல்லின மக்களும் பாரம்பரியத்தை மதித்து இங்கு வாழ்வது குறிப்பிடத்தக்கது இம் மக்களின் ஒற்றுமையை நாம் பார்த்தோமானால் கோயில்கள் திருவிழாக்கள் கொண்டாட்டத்தின் போது எழுவான்கரையில் கோயிற் திருவிழாக்களில் படுவான்கரை மக்களும் படுவான்கரை கோயில்கள் திருவிழாக்களில் எழுவான்கரை மக்களும் கூடி விழாக்களை சிறப்பிப்பது குறிப்பிடத்தக்கது. இதை சில பாடல்வரிகளில் பார்த்தோமானால் ”வாடிக்கரை அம்மன் பேரு , வானம் பூமி முழங்குது, எழுவான் படுவான் இரண்டு கரை, ஒரே தாளம் அடிக்குது.” இவ்வாறு பாடப்பட்டிருக்கும் பாட்டிலிருந்து இவ் விரண்டு பிரிவினர்களும் ஒற்றுமையாக இப் பிரதேசத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பில் பல்லின மக்களும் பல்லின கலாச்சார பாரம்பரியங்களையும் இன்னமும் பேணிப் பாதுகாத்துவருவது குறிப்பிடத்தக்கது.

சு.சரவணதாஸ்
பொது நூலகம்
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

The Strength of Vihitra

There was a girl called Vihitra who lived in a small village surrounded by green paddy fields and tall coconut trees. The gentle wind always carried the scent of jasmine and fresh earth. But her life, unlike the beauty of her surroundings, was filled with sorrow and struggle. From a very young age, she learned the taste of tears and the weight of loneliness. Her parents had passed away when she was just seven years old, leaving her alone in a world that seemed too big and too cruel for such a small child.

After her parents' death, she was taken in by her aunt. Though her aunt gave her a roof to sleep under, it was never truly a home. The woman's heart was as hard as the stones in the garden. Every day, Vihitra woke up before dawn to sweep the house, fetch water, and cook rice before going to school. Often, her aunt scolded her for the smallest mistakes, sometimes even blaming her for things she never did. The little girl cried silently at night, hugging her small pillow, whispering her parents' names, and wishing they could come back.

At school, Vihitra was quiet and shy. She had no fancy books, no beautiful bag, and no lunch to share. Yet, she had something no one could take away—a burning determination to study and change her life. Her teachers often admired her hard work. Even when she came to class with tired eyes and torn clothes, her notebooks were always neat, and her handwriting was as graceful as her heart. She wanted to become someone strong, someone who could live without begging for kindness.

Years passed. Through every storm of hardship, Vihitra held on. When she finished her final exams, she studied late into the night under the dim light of a kerosene lamp. The sound of crickets and the rustle of leaves kept her company. Finally, the day of results arrived. Her heart beat faster than the school bell as she read her name on the top of the list. She had passed with flying colors. For the first time, her eyes were filled with tears of joy. She had made it.

After completing her studies, she moved to the city to find work. The city was a new world—full of lights, noise, and strangers. Tall buildings rose like mountains, and vehicles rushed like streams of silver. It was both exciting and frightening. Vihitra found a job as a clerk in an office. She worked hard, always polite and helpful, and soon became well liked by her colleagues.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Among them was a kind-hearted Sri Lankan man named Ruwan. He was gentle, cheerful, and always ready to lend a hand. He noticed Vihitra's quiet nature and respected her strength. Slowly, a friendship grew between them—one built on trust and understanding. Ruwan would sometimes bring her tea or help her carry files. They shared stories of their childhood, their dreams, and their struggles. For the first time in years, Vihitra laughed freely.

Months turned into years, and their bond blossomed into love. Under the moonlit sky by the beach, Ruwan proposed to her. The waves whispered softly as if blessing their union. With tears in her eyes, Vihitra said yes. She believed she had finally found her happiness—the family she had always longed for. Soon, they got married in a small ceremony filled with smiles, flowers, and the sound of drums. Everyone said they were a beautiful couple.

For a while, everything felt perfect. They cooked together, watched the rain through their window, and dreamed of building a small house by the sea. But life, as it often does, had other plans. Slowly, cracks began to appear in their marriage. Ruwan started coming home late, his eyes tired, his words cold. Vihitra tried to ask what was wrong, but he always said he was busy. Days turned into nights of silence. The laughter that once filled their home disappeared.

One evening, she found out the painful truth—Ruwan had fallen in love with another woman. Her world shattered like a glass dropped on stone. She confronted him with trembling hands and a breaking voice, but he turned away without remorse. The man who once promised to love her forever had become a stranger. Rumors spread quickly, and soon everyone in their small community knew. Humiliation burned her heart, but she stayed silent.

Finally, she made the hardest decision of her life. She packed her few belongings, left the house, and walked away from the man she once loved. The road was long, and the night was dark, but she kept walking. Tears rolled down her cheeks, mixing with the rain that began to fall. Each drop felt like a goodbye.

Vihitra moved to a small town near the hills. There, she rented a modest room with a single window overlooking a garden of wildflowers. She found a new job at a school, teaching young children. The laughter of her students slowly filled

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

the emptiness in her heart. They loved her kind voice, and she loved their innocence. Every day, she taught them not just words and numbers but also lessons about strength and kindness.

She often sat by the window at sunset, watching the gold

J.Mithoshana



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"Still Waiting for You"

I met you where the daylight shone, Among the files, the work, the tone.
A glance became a gentle start, A whisper bloomed within my heart.
Your smile was calm, your eyes were deep, they woke up the dreams I used to keep.
In crowded halls, through every task, You were the peace I didn't ask.
The world grew soft when you were near, Your voice erased my doubt and fear.
Each word you spoke became my song, Each silence made the days less long.
We walked through rain, through golden skies, I saw my world within your eyes.
We built a home of dreams and grace, And found our heaven in one place.

Our hands once knew the same sweet prayer, A life we promised we would share.
The nights were stars, the days were spring, Our hearts could heal from anything.
But time is cruel, and fate is unkind, It scattered love and left behind
A thousand tears, a bitter fight, That turned our dawns to an endless night.

We said goodbye, though hearts still bled, The words were sharp, the love half-dead.
I watched you go, the door was closed, Yet something pure in me still rose.
I thought the pain would fade away, That love would die, that hearts decay.
But even now, though months have passed, My love for you remains steadfast.
Each morning finds me thinking still, Of how your laugh could break the chill.
The sunlight falls where you once stood, And stirs my soul with what was good.

I see your chair, your coffee mug, The pillow where your warmth once hugged.
Your name still trembles on my breath, A ghost that will not fade in death.
The wind still whispers to you, Across the waves, across the sea.
It says your heart is not so far, That love still knows where memories are.
I keep your ring beside my bed, It shines with words we once had said.
Though broken vows may tear apart, The bond still lives inside my heart.
They say move on, forget, forgive, But how can I if love still lives?
The heart remembers what was true, And every beat still calls for you.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Sometimes I dream you're by my side, No anger left, no tears to hide.
We laugh again, the world feels whole, Then morning breaks and steals my soul.
The roads we walked were wet with rain,Each step repeats your name again.
I wander back where love once grew,Just to feel closer still to you.
In every face, I search your trace, In every song, your soft embrace.
The world may change, the seasons flee, But none can take your part from me.
You were my calm, my evening rest, The one who knew my heart the best.
Without you here, the nights are long, The silence hums our broken song.
I wonder if you miss me too, If shadows bring my thoughts to you.
Do you remember how we dreamed, Or has it vanished as it seemed?
Sometimes I think I see your face, Among the crowd, a fleeting trace.
My heart forgets, my feet will start, To chase the echo of my heart.
But love is not a thing to end, It only bends, it learns to mend.
Though distance stands, though time may grow, My heart still beats the way you know.
I do not curse the days we had, Nor blame the storms that made us sad.
For even pain that love can bring, Still wears a crown, still feels like spring.
Each night I light a single flame, And softly whisper out your name.
If love can fly, if hope is true, Then maybe it will reach you.
I dream you'll knock upon my door, And we'll be strangers nevermore.
Your eyes will tell me what you mean, Without regret, without the pain between.
We'll sit and talk about all we've learned, Of bridges crossed, of hearts returned.
The tears we shed will wash away, The years that kept our souls astray.
But if that dream should never start,I'll still keep you within my heart.
For once in life, I knew such grace,And love that time cannot erase.
The world moves on, yet I remain, Still holding love through joy and pain.
The bond we shared, the vows we spoke, Still linger like unbroken smoke.
I wait not out of foolish pride, But faith that love can still abide.
For what was real will find its way, No matter night, no matter day.
And if one dawn you turn around, And seek the peace you never found,
My heart will open, wide and free, Still waiting where it used to be.
For love like

J.Mithoshana

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வந்தாறுமூலை மகாவிஷ்ணு ஆலயத்தில் பின்பற்றப்பட்டு வருகின்ற உறியடித் திருவிழாவும் மரபுவழியான சம்பிரதாயங்களும்

முத்துலிங்கம் பவித்திரா
உயர் பட்டப்படிப்புகள்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

mpavirahavi@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பழமை வாய்ந்த விஷ்ணு ஆலயங்களில் ஒன்றாக வந்தாறுமூலை மகாவிஷ்ணு ஆலயம் விளங்குகின்றது. இப்பிரதேசத்தில் வைணவம் தனிச் சமயப்பிரிவாக இடம்பெறாவிடினும் பெரும்பாலானவர்கள் விஷ்ணு பக்தர்களாகவே காணப்படுவதுடன் கோவிந்தா என்று கூறிக்கொண்டு விபூதியினை நாமமாக இட்டுக் கொள்கின்றனர். பொதுவாக இவ்வாலயத்தினை கிருஷ்ணன் கோயில் என்று அழைக்கும் மரபுள்ளது. இவர்களின் பிரதான தொழில் விவசாயமும், மந்தை வளர்ப்பு ஆகும். மாடுகளின் நெருக்கமான தோழனான கண்ணன் அவதாரத்தை தொடர்புபடுத்தி செய்யும் தொழில் விருத்தியடைய வேண்டும் என எண்ணி விஷ்ணுவிற்கு பிரத்தியோகமான பூசை, வழிபாட்டு நெறிமுறைகளை முன்னெடுத்துச் செல்வதனை அவதானிக்க முடிகின்றது. ஆகம வழிபாட்டிற்குள்வாங்கப்பட்டு வைணவ நடைமுறைகளை உள்வாங்கி அதன்படி வழிபாடுகள் இயற்றப்படுகின்ற ஆலயங்களில் ஒன்றாக இவ்வாலயம் காணப்படினும் கஞ்சன் அம்மானைக்கும் முக்கியத்துவம் கொடுத்து அதன்வழி வழிபாடு இயற்றப்படுகின்றது. உற்சவ காலங்களில் இடம்பெறும் உறியடித் திருவிழாவானது சடங்கு சார் செயல்நியைில் இடம்பெறுகின்றது. உறியடித்தலானது நாடகப்பாங்கில் இடம்பெறுவதோடு, அப்பிரதேச மக்களே அவற்றில் வருகின்ற பாத்திரங்களை ஏற்று நடிக்கும் முக்கிய கதாப் பாத்திரங்களாகவுள்ளனர். அந்தவகையில் கண்ணனின் ஒவ்வொரு பருவ நிலையினையும் (தாலாட்டுதல், அச்சோப் பருவம், சப்பாணிப் பருவம், தளர் நடைப் பருவம், எழும்பி நடத்தல், கண்ணன் ஆடுதல், உரலில் கட்டுப்படுதல், தயிர் களவாடுதல்) நாடகப் பாங்கில் பாடல் இசைக்கப்பட நடித்துக் காட்டப்படுவதுடன் உரையாடலானது பிரதேச வழங்குச் சொற்களில் இடம்பெறுகின்றது. மக்களுக்கு உளத்திருப்தியையும், மகிழ்ச்சியையும், சமூக ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துகின்ற வழிபாடாக உறியடித் திருவிழா விளங்குகின்றது. வந்தாறுமூலை மகாவிஷ்ணு ஆலயத்தில் சடங்கு சார் செயல்நிலையில் மரபுவழியாக பின்பற்றப்பட்டு வருகின்ற உறியடித் திருவிழா பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாய்வில் கள ஆய்வு முறை பிரதானமாக பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், பகுப்பாய்வு முறை, வரலாற்றியல் ஆய்வு முறை, விபரண ஆய்வு முறை, ஒப்பீட்டாய்வு முறை போன்ற ஆய்வு முறைமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வந்தாறுமூலை மகாவிஷ்ணு ஆலயம் பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு இவ்வாய்வு ஓர் முன்னோடியாக அமையும்.

திறவுச் சொற்கள் : உறியடித் திருவிழா, உறி, தயிர் முட்டி, கண்ணன், மருத மரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிமுகம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஊர்களுள் வந்தாறுமூலையானது பழமையான ஒரு கிராமமாகும். மட்டக்களப்புக்கு வருகை தந்த முக்குவர்கள் இங்கு வாழ்ந்த தமிழர்களால் பல்வேறுவகையில் துன்புறுத்தப்பட்டும், பலமுறை அவர்களுடன் போர்களை மேற்கொண்டும் தோல்வியடைந்தனர். பின்னர் ஆப்கானிஸ்தானிலிருந்து வருகை தந்த பட்டானிகளின் உதவியுடன் தமிழர்களை துரத்தி அப்பால் அமைந்துள்ள களப்பில் ஓர் கல் ஒன்றை நட்டு இவ் எல்லையினுள் அவர்களை வருகைதரக்கூடாதென்று ஆக்ஞை செய்து திரும்பினர் என்றும் இவ்வாறு தமிழரைத் துரத்தி திரும்பி வருகைதந்த போது துரத்திச் சென்ற முக்குவர்கள் வந்து சந்தித்த இடம் சந்திவெளி என்றும் அவர்கள் அனைவரும் வந்தாறிய இடம் வந்தாறுமூலை என்றும் அழைக்கப்பட்டதாக இவ் ஊரின் பெயர் தோற்றத்தினை மரபுவழிக் கதை மூலம் அறியமுடிகின்றது.

மட்டக்களப்பு நகரிலிருந்து இவ்வாலயம் பத்தொன்பது கி.மீ. தொலைவில் அமைந்துள்ளதுடன் வந்தாறுமூலை விஷ்ணு மகாவித்தியாலயத்திற்கு 50 மீற்றருக்கு அருகில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் கிழக்கே வங்கக்கடலும், மேற்கே மாந்துறைக்கிளை ஆறும் அமைந்து காணப்படுகின்றன. இவற்றிற்கு இடையே வந்தாறுமூலை எனும் பிரதேசம் அமையப்பெற்றுள்ளது.

ஆலய வரலாறு

வந்தாறுமூலை விஷ்ணு ஆலயமானது நீண்டகால வரலாற்றினைக் கொண்டு விளங்குகின்றது. ஏறக்குறைய 500 வருடங்களுக்கு முன்பு இவ்வாலயம் சிறுஓலைக் குடிசையில் அமைக்கப்பட்டு மக்களின் வழிபாட்டு இடமாக விளங்கியது. (கந்தையா.வி.சி.1991) இவ்வாலயத்தின் தொன்மையான வரலாற்றை அறிய உதவும் சான்றாதாரமாக ஆலயத்தில் கிடைக்கப்பெற்ற செப்புப்பட்டயம் விளங்குகின்றது. மகாவிஷ்ணு மூலஸ்தானத்தின் தெய்வமாக காட்சியளிக்கின்றார். 115 வருடத்திற்கு முன்பு வைரவர், ஆஞ்சநேயர் முதலிய பரிவாரத் தெய்வங்களுக்கு கட்டடம் கட்டப்பட்டன. அதனைத் தொடர்ந்து நவக்கிரக சந்நிதானமும், மகாலட்சுமி சந்நிதானமும், ஆண்டாள் சந்நிதானமும் கட்டப்பட்டன. ஆரம்பகாலத்தில் இவ்வாலயத்தில் கொடிமரம் அமைந்திருக்கவில்லை. கல்யாணக்கால் நடப்பட்டு கம்சன் விரதம் அனுஷ்டிக்கப்பட்டு கஞ்சன் அம்மானை பாடப்பட்டு பூசை நடைபெற்றுள்ளது. பின்னர் வீரக்குட்டி என்பவர் கோயில் தலைவராக இருந்த காலத்தில் தற்போதுள்ள கொடிமரம் கட்டப்பட்டது. ஆலயத்தின் பிரதான வாசலில் இரண்டு பக்கமும் இரண்டு கற்கள் காணப்படுகின்றன. அவ்விரண்டு கற்களும் ஆலயம் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்னரே இருந்துள்ளதாக அறியமுடிகின்றது.

1998ம் ஆண்டு காலப்பகுதியில் நிர்வாக சபையினர் மேற்கொண்ட தீர்மானத்தின் படி இவ்வாலயத்தின் மூலஸ்தானப் பகுதி புனரமைப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. மூலஸ்தானப் பகுதியை புனரமைத்து கொண்டிருந்த வேளை நாட்டில் ஏற்பட்ட அமைதியற்ற சூழலினாலும், பயங்கரவாதப் பிரச்சினையின் காரணமாகவும் அவை இடையிலேயே தடைப்பட்டது. கோயில் அமைக்கப்பட்ட காலத்தில் வருடாந்த உற்சவத் திருவிழா புரட்டாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாதத்தில் நடைபெற்றது. பின்னர் சுமார் இருபது வருடங்களுக்குப் பின் திருவிழாவானது ஆனி மாதத்தில் நடைபெற்று வருகின்றது. இவ் உற்சவம் ஆனிப் பூரணை தினத்தில் நிகழும் தீர்த்தோற்சவத்தோடு முடிவுறும். புரட்டாதி மாதத்தில் கஞ்சன் கதைப் படித்தலும், மார்கழி மாதத்தில் வைகுந்த ஏகாதசியும், கிருஷ்ண ஜெயந்திப் பூசையும் சிறப்பாக நடைபெறுகின்றன.

ஆலயக் கும்பாபிசேகம் நடைபெற்ற போது மூலமூர்த்தியின் விஷ்ணு சிலையும் புதிய விக்கிரமாக அபிசேகம் செய்யப்பட்டது. கும்பாபிசேகம் செய்வதற்கு முன்பு காணப்பட்ட மூலமூர்த்தியின் சிலை பலகாலம் அபிசேகம் நடைபெற்று சிதைவடைந்தமையினால் புதிய சிலையானது இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்டு இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீதேவி, பூதேவியுடன் இணைந்த சிலை விஷ்ணு சிலையுடன் இணைந்து காணப்படுகின்றது. 2023ம் ஆண்டு மீண்டும் கும்பாபிசேகப் பெருவிழா இவ்வாலயத்தில் 27.04.2023ம் திகதி வியாழக்கிழமை கிரியைகள் ஆரம்பமாகி 01.05.2023 - 02.05.2023 ஆகிய இரணடு நாட்கள் எண்ணெய்க்காப்பு நிகழ்வு இடம்பெற்று 03.05.2023ம் திகதி புதன்கிழமை மிக விமர்சையாக கும்பாபிசேகமும் நடைபெற்றது. கோபுரங்கள் காணப்படுகின்றன. வடக்கே பார்த்த வண்ணம் ஆலயத்தின் பிரதான வாசல் அமைந்துள்ளது.

உறியடித் திருவிழா

வந்தாறுமூலை மகாவிஷ்ணு ஆலயத்தில் உறியடித் திருவிழாவானது மிக விமர்சையாக பத்தாம் நாள் நள்ளிரவு 12.00 மணிக்கு இடம்பெறுகின்றது. உறியடி உற்சவத்தில் கண்ணனின் ஒவ்வொரு பருவத்தினையும் (தாலாட்டுதல், அச்சோப் பருவம், சப்பாணிப் பருவம், தளர் நடைப் பருவம், எழும்பி நடத்தல், கண்ணன் ஆடுதல், உரலில் கட்டுப்படுதல், தயிர் களவாடுதல்) நாடகப் பாங்கில் நடித்துக் காட்டப்படுகின்றது. உறியடிப்பதற்காக எட்டு அல்லது பத்து தயிர் முட்டிகள் கட்டப்படுகின்றன. உறியடித் திருவிழாவில் உறியடிப்பதற்காக பிரத்தியோகமாக கொங்கிறிட் கட்டடம் ஆலயத்திற்கு முன்பாக கட்டப்பட்டிருக்கும் அதன் மீதே உறி எனப்படும் தயிர் முட்டிகள் கட்டப்படுகின்றன. பாலினைக் காய்ச்சி தயிர் வார்த்து அதனை கயிற்றால் பின்னி வைத்திருப்பார்கள். கமுகம் ஓலை, வெற்றிலை, பாக்கு, தாமரைப்பூ, பலகாரம், உழுந்து வடை, வாழைப்பழம், முதலியவற்றினால் தயிர் முட்டிகள் தெரியாவண்ணம் அலங்காரத்துடன் கட்டி மறைத்து வைத்திருப்பார்கள். தயிர் முட்டிகளை கப்பி போன்று கயிறு போட்டு நுகம் எனும் மரத்தினால் தயிர்ப் பானைகள் அனைத்தும் கோர்த்துக் கட்டப்பட்டிருக்கும் (தயிர்ப் பானைகள் மேலும் கீழும் செல்வதற்கு ஏற்றவாறு கட்டப்பட்டிருக்கும்) ஆலயத்திலிருக்கும் மருதமரத்திலிருந்து கிளைகள் வெட்டப்பட்டு அவை மருத மரங்களாக உறி கட்டப்பட்டிருக்கும் இடம் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

உறியடித்தலுக்காக சிறுபராயக் கண்ணன் (06-07 வயது), கண்ணன் (12 வயது), யசோதை, இடைச்சி முதலிய பாத்திரங்களை இவ்வூர் மக்கள் ஏற்று நடிக்கின்றனர். பெரியபரமக்குடியைச் சேர்ந்த ஆறுமுகத்தான் பரம்பரையிலிருக்கு பிள்ளை கிருஷ்ணராக பாத்திரம் ஏற்று நடிப்பார். வழக்கமாக இவர்கள் பரம்பரையே கண்ணனாக பாத்திரம் தாங்கி நடிக்கும் வழக்கமுள்ளது. யசோதையாக பெரியபரமக்குடியைச் சேர்ந்த க.சுதந்திரன் என்பவரே பல வருடகாலமாக யசோதை வேடம் அணிந்து நடித்து வருகின்றார். யசோதை புடைவையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தலையலங்காரத்தில் சிறிய மகுடத்துடன், ஆபரணங்களையும் அணிந்திருப்பார். இடைச்சி சாதாரண பெண் வேடத்துடன் புடைவை அணிந்திருப்பார். கண்ணனாக நடிப்பவர் தாப்பாச்சியுடன் முகத்திற்கு நீல நிறத்தில் மாத்து போட்டு கண்ணன் போன்று தன்னை ஒப்பனை செய்திருப்பார்.

சுவாமி வசந்த மண்டபத்திலிருந்து இரவுப் பூசைக்காக வெளி வீதியில் கருடனில் உலா வருகின்ற போது மாமியார் மூலையில் பத்து நிமிடம் நாதஸ்வரத்தில் பாடல்கள் இசைக்கப்பட்ட பின்னர் ஈசான மூலையில் தயிர் முட்டி உடைக்கும் நிகழ்வு இடம்பெறும். தயிர் முட்டிகள் ஈசான மூலையிலே கட்டப்பட்டிருக்கும் அவ்விடத்திலே சுவாமி கருட வாகனத்தில் உலா விக்கிரகத்தில் வருகை தந்து காட்சியளிப்பார். கண்ணன் கலையரங்கிலிருந்து ஈசான மூலையின் ஓர் ஓடைக்குள்ளே தயிர் முட்டிகள் கட்டப்பட்டிருக்கும். இருபக்கமும் மக்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு பார்வையிடுவதற்கு ஏற்றாற் போல் கட்டப்பட்டிருக்கும்.

கண்ணன் பிறந்து வளரும் வரை மேற்கொண்ட சேட்டைகள் அனைத்தும் இங்கு உறியடி உற்சவ நாளில் சிறப்பாக நடித்துக் காட்டப்படுகின்றது. கண்ணன் கலையரங்கிலிருந்து பாடல்கள் இசைக்கப்பட அதற்கேற்ற பாவனையினை அங்கு பாத்திரம் ஏற்று இருப்பவர்களால் நடித்துக் காட்டப்படுகின்றன. கிருஷ்ண பகவான் பிறந்து, வளர்ந்து எவ்வாறான சேட்டைகளை செய்திருப்பாரோ அவற்றை எல்லாம் கற்பனை செய்து சிறுகுழந்தை பிறந்து வளரும் வரை மேற்கொள்ளும் செயற்பாடுகள் அனைத்தையும் அவர்களால் நடித்துக் காட்டப்படுகின்றன. அந்தவகையில் கிருஷ்ண பகவானின் ஒவ்வொரு பருவ வளர்ச்சியினையும் பிரித்து பாவனை செய்கின்றனர். கிருஷ்ண பகவானை யசோதை தாலாட்டுதல், அச்சோப் பருவம் (தவளுதல்), சப்பாணிப் பருவம், தளர் நடைப்பருவம் (விழுதல்), எழும்பி நடத்தல், கண்ணன் ஆடுதல், கண்ணன் உரலில் கட்டுப்படுதல், உறியிலுள்ள தயிரினை களவெடுத்தல் முதலியன நாடகப்பாங்கில் நடித்துக் காட்டப்படுகின்றன.

கண்ணனைத் தாலாட்டுதல்

யசோதை வேடம் தாங்கி நிற்பவர் கண்ணன் பிறந்தவுடன் தாலாட்டுப் பாடி ஒவ்வொரு இடமாகச் சென்று குழந்தையினை உறங்க வைக்கும் காட்சி நடித்துக் காட்டப்படுகின்றது. ஆரம்பத்தில் பல பாடல்கள் பாடி அதன் பின்னர் அதற்கான கருத்துக்கள் கூறப்பட்டன. தற்போது ஒவ்வொரு பாடலும் பாடி அதற்கான கருத்துக்கள் கூறப்பட அதற்கான செயற்பாடுகளை யசோதை நடித்துக் காட்டுவார். (இரண்டு வருடகாலமாக இவ்வாறு நடைபெறுகின்றது.) ஒரு பொம்மையை பிறந்த சிறுபராயக் கண்ணனாக பாவனை செய்து அழும் குழந்தையினை தாய் எவ்வாறு சீராட்டி, தாலாட்டி பாலூட்டி தூங்க வைப்பாளோ அது போன்று அப் பொம்மையினை கிருஷ்ணராக பாவனை செய்து யசோதை வேடம் அணிந்திருப்பவரால் நடித்துக் காட்டப்படுகின்றது. இதன்போது மேல்வரும் பாடல்கள் மேடையில் உள்ளவர்களால் பாடப்பட பாடலில் வரும் விடயங்களை யசோதை வேடம் தாங்கி நிற்பவர் உள்வாங்கி அப்பாடலுக்கு ஏற்றாற் போல் நடித்துக் காட்டுவார்.

"தந்தன்னுலியில் அவர் வைத்த தயிர்பால் வெண்ணெய் எட்டாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கிந்தி உரலின் மிசை ஏறி இனங் கோதையர் முன் கூத்தாடி
நந்தன் மனையில் யசோதையயிரு நயனமகளிக்க விளையாடும்
மைந்தனிரு தாள் ஒருபோதும் மறவார் தாம்" (தொடங்கும் போதும் முடிவிலும் படித்தல்)

"மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக்குறளனே தாலேலோ
வையம் அளந்தானே தாலேலோ....." (நேர்காணல்:தா.சித்திரவேல்,66)

அச்சோப் பருவம்

சிறுகுழந்தைப் பருவத்தில் தாலாட்டுப் பாடி இசைத்து முடிந்தவுடன் கண்ணனின் சிறுகுழந்தைப் பருவத்தில் நடைபெறுகின்ற விடயங்கள் அனைத்தும் பாடலில் உள்ளது போன்று செய்து காட்டப்படுகின்றன. பின்னர் கண்ணபிரான் அச்சோப் பருவத்தில் தவளுகின்ற போது அவர் மேற்கொண்ட செயல்கள் நடித்துக் காட்டப்படுகின்றன. இதற்கு ஏற்றாற் போல் சிறுபராயக் கண்ணனாக (ஆறு வயது) வேடம் அணிந்திருப்பவரே அவ்வயதுக்கேற்றால் போல் பாத்திரமாக உருமாறி நடிக்கின்றார். தவளுகின்ற போது சிறுபராயக் கண்ணனாக பாவனை செய்பவர் தவளும் சிறு குழந்தையின் சேட்டைகளை உள்வாங்கி கண்ண பகவான் இவற்றையெல்லாம் செய்திருப்பார் என கற்பனை செய்து கிருஷ்ணராக பாவனை செய்து நடித்துக்காட்டுவார்.

கிருஷ்ணர் தவளும் போது நழுவி விழுதல் யசோதை அவனை பின்னாலே ஓடிப் பிடித்தல், குழந்தை தவளுகின்ற போது சறுக்கி விழுதல், முகம் குப்பறை விழுதல் போன்று பிள்ளை செய்கின்ற செயல்கள் ஒவ்வொன்றும் செய்து காட்டப்படுகின்றன. கண்ணபகவான் செய்யும் சேட்டைகளை யசோதை ரசித்தல், குழந்தைக்கு ஏதும் நடந்து விடும் என்று எண்ணி முன்னும் பின்னுமாக குழந்தைக்குப் பின்னாலே செல்லுதல் போன்ற செயல்களையும் தாயானவள் எவ்வாறு குழந்தையின் பாதுகாப்புக்காக செய்வாளோ அச்செயற்பாடுகள் அனைத்தையும் யசோதை வேடம் தாங்கி நிற்பவரால் நடித்துக் காட்டப்படுகின்றது. அதற்கேற்றாற் போல் சிறு குழந்தையின் செயற்பாடுகளை எல்லாம் கண்ணன் பாத்திரம் ஏற்று நடிக்கும் பிள்ளையினால் செய்து காட்டப்படுகின்றது. தவளுகின்ற அச்சோப் பருவத்தின் போது மேல்வரும் பாடல் பாடப்பட அதற்கேற்றால் போல் நடித்துக் காட்டப்படுகின்றன. இதன்போது கருத்துக்களும் கூறப்படுகின்றது.

"பொன் இயல் கிண்கிணி சுட்டி புறங் கட்டித்
தன்இயல் ஓசை சலன் சலன் என்றி
மின்னியல் வேகம் விரைந்து எதிர் வந்தாற்போல்
என்இடைக்கு ஓட்டரா அச்சோ அச்சோ
எம்பெருமான் வராய் அச்சோ அச்சோ...(நேர்காணல்:தா.சித்திரவேல்,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கண்ணனின் சப்பாணி பருவம்

அச்சோப் பருவத்திற்கு பின்னர் கிருஷ்ணரின் சப்பாணிப்பருவம் நடித்துக் காட்டப்படுகின்றது. சப்பாணி கொட்டி தாயான யசோதை கண்ணனுக்கு செய்து காட்டுவாள் அதனைப் பார்த்து அவரும் தாய் போல் சப்பாணி கொட்டுகின்ற செயற்பாடுகள் இடம்பெறும். சப்பாணி கொட்டிக் கொண்டிருக்கும் போது விழுந்து விடுவார் ஏனெனின் அப்பேதுதான் அவர் எழுந்து இருப்பதற்கு தெரிந்த குழந்தை என்பதனால் அவர் சப்பாணி கொட்டிக் கொண்டிருக்கும் போது விழுவது போன்று பாவனை செய்யப்படுகின்றது. இச்சந்தர்பத்தில் மேல்வரும் பாடல் பாடப்படுகின்றது.

"மாணிக்கக் கிண்கிணி ஆர்ப்ப மருங்கின்மேல்
ஆணிப் பொன்னாற் செய்த ஆய்பொன் உடைமணி
பேணி பவளமாய் முத்து இலங்க பண்டு....சட்டித் தயிரும் தடாவினில் வெண்ணெய்யும்
பட்டிக் கன்றே கொட்டாய் சப்பாணி...." (நேர்காணல்:தா.சித்திரவேல், 66)

தளர் நடைப்பருவம்

சப்பாணி பருவம் முடிவடைந்த பின்னர் கிருஷ்ணர் மெல்ல மெல்ல எழும்பி நடத்தல் இடம்பெறும். சிறுகுழந்தை நடக்கின்ற போது எழும்பி நிற்றல் விழுதல், சிறிது தூரம் நடத்தல் விழுதல் மழலையாக நடத்தல் பின் விழுதல் முதலிய செயற்பாடுகள் நடித்துக் காட்டப்படுகின்றன. இதன்போது குழந்தைக்குப் பின்னால் யசோதை சென்று விழுந்த குழந்தையினை தூக்கி சமாதானப்படுத்துதல், மீண்டும் கண்ணன் எழும்பி முன்னர் நடந்ததை விட கொஞ்சம் நன்றாக நடத்தல் பின்னர் விழுதல் பின்னர் நன்றாக நடத்தல் ஓடி, ஆடி நடத்தல் முதலிய செயல்கள் நடித்துக் காட்டப்படுகின்றன. நன்றாக நடந்ததன் பின்னர் வெண்ணெய் களவெடுக்கச் செல்வதும், பெண்களைக் கேலி செய்யும் கிருஷ்ணராக மாற்றம் பெறுதல் முதலியன இவ் தளர்நடைப் பருவத்திற்குப் பின்னர் செய்து காட்டப்படுகின்றது.

"மின்னுக் கொடியும் ஓர் வெண் திங்களும்
சூழ்பரி வேடமுமாய்ப்
பின்னற் துலங்கும் அரசிலையும்
.....தளர்நடை நடவானோ....." (நேர்காணல்:தா.சித்திரவேல்,66)

கண்ணன் ஆடுதல்

தளர்நடைப் பருவத்தின் பின்னர் நன்கு ஓடி ஆடித் திரிகின்ற சந்தோசமான கிருஷ்ணராக வலம் வருவார். ஆடுவார், பாடுவார் என பல சேட்டைச் செயல்களைக் கண்ணன் மேற்கொள்வார். உறியில் தயிர் களவெடுத்தல், பெண்களிடம் சேட்டைகள் செய்வதும் நடித்துக் காட்டப்படுகின்றது. இதன் போது மேல்வரும் பாடல்கள் இசைக்கப்படுகின்றது.

"நம்முடைய நாயகனே நான்மறையின் பொருளே
நாவியுள் நற்கமல நான்முகனுக்கு ஒருகால்
தம்மனை ஆனவனை தரணி தலமுழுதும்
....அம்ம எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை
ஆயர்கள் போரேறே ஆடுக ஆடுகவே....." (நேர்காணல்:தா.சித்திரவேல்,66)

கண்ணன் உரலில் கட்டுப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கண்ணன் ஆடிப் பாடி நடந்து சேட்டைகள் செய்கின்ற போது கோகுலத்தில் இருப்பவர்களின் வீடுகளிற்குச் சென்று உறியில் கட்டப்பட்டிருக்கும் தயிர் முட்டிகளை உடைத்து கொண்டு அதனை களவாடி உண்ணுதல் இடம்பெறும். இதனை கண்ணுற்ற இடைச்சி பலமுறை கூறி தடுத்தும் இவ்வாறான களவாடல் செயற்பாடுகள் முடிந்தவாறு இல்லை. இதனால் கோபமுற்ற இடைச்சி கண்ணனை உரலில் கட்டி தாயான யசோதையிடம் முறையிடச் செல்லும் காட்சியில் உரையாடலானது மேல்வருமாறு இடம்பெறுகின்றது. (பிரதேச வழக்குச் சொற்களிலே உரையாடல் இடம்பெறும்)

இடைச்சி :- பால் காய்ச்சி தயிர் போட்டு உறியில கட்டி வைச்சா உன்ட மகன் அத எல்லாம் உடைச்சு களவெடுத்து சாப்பிடுறான் உனக்கு புள்ள வளர்க்கத் தெரியாதா இப்பிடியும் பிள்ள வளர்க்கிறதா?

யசோதை :- அம்மா எங்கட அரண்மனையில பால், தயிர் பருகாமல் வெள்ள வெள்ளமாக பரவிக் கொட்டிக் கொண்டு கிடக்கு இத விட்டுத்து உங்கட வீட்டுலயா என்ட புள்ள தயிர் களவெடுக்க வந்த என்ன மாமி தேவ இல்லாத கத கதைக்கிறா? களவாடின என்டு பொய் சொல்றியல்

இடைச்சி:- இல்ல உன்ட புள்ள இங்க வா இங்க வா என யசோதையை இழுத்துக் கொண்டு செல்வார். இடைச்சி கட்டிப் போட்டு இருக்கும் கண்ணனை இழுத்துக் கொண்டு வந்து தயிரினை உண்டவாறு காணப்படுவார். அவரை யசோதையிடம் இடைச்சி காட்டுவாள்.

யசோதை:- என்ட மகனே உன்ன கட்டிப் போட்டு வைச்சிருக்கா? என யசோதை அழுது கொண்டு கண்ணனிடம் களவெடுப்பீயா..... எனக் பல முறை கூறி அவருக்கு அடித்து புலம்பி உரலிலிருந்து கட்டி விட்டுச் செல்வார். (நேர்காணல்:க.சுதந்திரன்,75)

உரலானது மருத மரத்துடன் கட்டப்பட்டிருக்கும். இடுப்பில் கயிறு போட்டு உரலுடன் இணைத்துக் கட்டப்பட்டிருப்பார் கண்ணன் அப்போது அவர் தவண்டு தவண்டு வருவது போன்றும் பின்னர் மரங்கள் சாபம் பெறுவது போன்றன கண்ணன் கலையரங்கிலிருந்து பாடல் பாடுபவர்களால் பாடல் இசைக்கப்படும் ஆனால் அவை இங்கு அபிநயித்துக் காட்டப்படுவதில்லை பாடலிலே பாடப்படுகின்றது.

"முடியும் அன்றியே முதலும் ஆகினாய்
முதலும் அன்றியே வடிவம் ஆகினாய்
வடிவம் அன்றியே வண்ணமாகினாய்..." (நேர்காணல்:தா.சித்திரவேல்,66)

மேல்வரும் பாடல்கள் பாடி முடித்தவுடன் அதற்குரிய பொருள்களும் கூறப்படும் அதன் பின்னர் உரலில் கட்டு அவிழ்த்த பின்னர் கிருஷ்ணர் பல சேட்டைகளைச் செய்து கொண்டும், நையாண்டி செய்து கொண்டும், பெண்களை நக்கல் செய்து கொண்டிருப்பார் இதன்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கட்டப்பட்ட தயிர் முட்டிகளை மேலும் கீழுமாக இழுப்பார்கள் அது எப்போது கிருஷ்ணரின் கையில் கிடைக்கின்றதோ அச்சந்தர்பத்தில் கண்ணன் தன்னிடமுள்ள கோலினால் தயிர் முட்டிகளை உடைப்பார். இதற்கு முன்பாக தயிர் முட்டிகளை பதிக்கின்ற போது அதற்குள் கைவிட்டு தயிரினை அள்ளி ஈசான மூலையில் வீற்றிருக்கும் விஷ்ணு பகவானுக்கும், கருடனில் சாற்றுவார். இதனை கண்ணன் வேடம் அணிந்திருப்பவரே பூசுவார் பின்னர் பிராமணக் குருக்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்து அருகிலிருக்கும் பக்தர்கள் சிலருக்கும் பங்கிட்டு கொடுப்பார் அதன் பின்னரே தயிர் முட்டி உடைப்பதற்காகச் செல்வார்.

தயிர் முட்டி உடைக்கப்பட்ட பின்னர் உறியினை மறைத்து வைத்த தயிர் வடை, உழுந்து வடை, பலகாரம் முதலியவை பக்தர்களுக்கு கொடுக்கப்படும். தயிர் முட்டி உடைக்கப்பட்ட பின்னர் ஈசான மூலையில் சுவாமிக்குரிய அனைத்துப் பூசைகளும் இடம்பெறும். பட்டுச் சாற்றி தேவாரம் பாடி சுவாமியை உள்ளே கொண்டு செல்வார்கள். இதனைத் தொடர்ந்து அன்றைய நாளுக்கான திருவிழா இடம்பெற்று உறியடி உற்சவம் வந்தாறுமூலை மகாவிஷ்ணு ஆலயத்தில் மிகச்சிறப்பாக இடம்பெறுகின்றது.

நிறைவுரை

வந்தாறுமூலை பிரதேச மக்களின் பிரதான தொழிலாக விவசாயமும், மந்தை வளர்ப்பும் காணப்படுகின்றன. மாடுகளின் நெருக்கமான தோழனான கண்ணன் அவதாரத்தினைத் தொடர்புபடுத்தி தாம் செய்யும் தொழில் விருத்தியடைய வேண்டும் என எண்ணி விஷ்ணுவை வழிபடுகின்றனர். விஷ்ணுவிற்கு ஆகமமுறைப்படியும், சடங்கு சார் செயல்நிலையில் வழிபாடுகள் இடம்பெறுகின்றன. இவ்வாலயத்தினை கிருஷ்ணன் கோயில், கிட்ணன் கோயில் எனக்கூறியே வழிபாடு இயற்றுகின்றனர்.

மட்டக்களப்பு மக்களைப் பொறுத்தவரையில் பிறதேசத்து மக்களின் பாரம்பரியத்தை உள்வாங்குகின்ற போது அவர்கள் தங்களுடைய கலாசாரத்திற்கு ஏற்றவாறு தங்களுக்குத் தெரிந்த வகையில் அவர்களுடைய வழிபாட்டு முறைமைக்குள் புகுத்தி வழிபட்டு வந்துள்ளனர். அந்தவகையில் விஷ்ணு வழிபாட்டில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற உறியடித்தல் உற்சவத்தினைக் குறிப்பிடலாம். விஷ்ணு மீதுள்ள அதீத பக்தியின் வெளிபாட்டினையே உறியத்தல் உற்சவத்தினைக் கருதமுடிகின்றது ஏனெனின் தமது வீட்டிலுள்ள சிறுகுழந்தை பிறந்து, வளரும் போது எவ்வாறான சேட்டைகளைச் செய்கின்ற போது அவற்றினை அவதானித்து குழந்தை பிறத்தல், குப்பறை விழுதல், தவளுதல், எழும்பியிருத்தல், நடத்தல், ஓடுதல், ஆடுதல், சேட்டைகள் செய்தல்... கிருஷ்ணரின் சிறுபராயமும் இவ்வாறு தான் இருந்திருக்கும் என கற்பனை செய்து உறியடி உற்சவத்தில் புகுத்தி மகிழ்சியில் திழைக்கின்றனர்.

ஒரு வழிபாட்டினை முன்னெடுத்துச் செல்வதாயின் அதற்கு சமூகத்தின் ஒத்துழைப்பு, ஆதரவு இன்றியமையாது. உறியடி உற்சவத்தில் வழிபாட்டினை முன்னெடுத்துச் செல்பவர்களாகவும், அதற்கான ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்பவர்களாக அவ்வூர் மக்களேயுள்ளனர். பலவருடகாலமாக யசோதை பாத்திரமேற்பவர் தளர்வடையாது நடிப்பது பக்தியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வெளிப்பாடே எனலாம். கிருஷ்ணன் கோயில் உற்சவம் என்றாலே வெளிநாட்டிலிருப்பவர்களும், தொழில் நிமிர்த்தம் தமது வாழ்விடத்தினை மாற்றிக் கொண்டவர்களும் தமது சொந்த ஊரிற்கு வருடத்திற்கொருமுறையாவது வருவது விஷ்ணுவின் மீது கொண்டுள்ள அளவுகடந்த பக்தியே எனலாம். இதன்மூலம் சமூக ஒருங்கிணைப்பு ஏற்படுத்துகின்ற ஒன்றாகவும் விஷ்ணு வழிபாட்டில் உறியடித்தல் காணப்படுகின்றது.

உசாத்துணை நூல்கள்

1. கந்தையா.வி.சி.,(1991), மட்டக்களப்பு சைவக் கோயில்கள், இந்துசமயத் திணைக்களம்.
2. சுவீரா ஜெயஸ்வால், வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், நியூ செஞ்சரி வுக்கவுஸ்
3. சொக்கலிங்கம்.வீ.,வைகுந்த அம்மானை
4. மௌனகுரு.சி.,2013,மட்டக்களப்பு தமிழகத்தில் இந்துப் பண்பாடு இரண்டாம் உலக இந்து மாநாடு, மட்டக்களப்பு பிரதேசக்கிளை.
5. வித்தியானந்தன்,எஸ்.,(1970),கஞ்சன் அம்மானை

நேர்காணல்

1. கதிர்காமம் சுதந்திரன், வயது 75, 2023.05.21, பி.ப 2.00, உறியடித்தலில் யசோதை வேடம் அணிபவர்
2. சாட்சிநாத தெய்வேந்திர குருக்கள், வயது 66, 2023.08.20 பி.ப 3.00, ஆலயக்குருக்கள்
3. தா.சித்திரவேல், வயது 66, 2023.08.20 பி.ப 5.00, உறியடித்தல் பாடல் பாடுபவர்
4. கே.யோகராஜா, வயது 55, 2023.08.12, பி.ப 5.00, ஆலய நிருவாகத்தவர்
5. வி.தர்சிக்கா, வயது 32, 2023.09.22 பி.ப 4.00, அபிவிருத்தி உத்தியோகத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சுற்றுப்புறச் சூழல் மாசடைவதை தடுப்போம்

நாம் வசிக்கும் இந்த அழகிய உலகினில் நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலினாலுமே இந்த அழகிய உலகம் சீர்குலைகின்றது. இதற்கு முதற் காரணம் மனிதர்களே, மனிதர்கள் தமது ஒவ்வொரு நாள் தேவைகளை நிறைவேற்றும் போதும் வெவ்வேறு தீமையான விடயங்களையும் செய்கின்றனர். சுற்றுசூழல் மாசடைவதற்கான முழுக்காரணமே மனிதர்கள் என நாம் நினைக்கின்றோம். ஆயினும் விலங்குகள் மற்றும் தொழிற்சாலைகள் போன்றவற்றாலும் சூழல் மாசடைகின்றது. சுற்றுசூழல் பாதுகாக்கபட வேண்டுமானால் நாம் அனைவரம் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

வீட்டுக்கழிவுகளை சுற்றுப்புறச்சூழலில் எரிதல் மற்றும் வீட்டில் வளர்க்கும் விலங்குகளை நீர்நிலைகளில் குளிக்க வைப்பதனாலும், இறந்த விலங்குகளை நீர்நிலையில் வீசுவதனால் சூழல் அழகு பாதிக்கப்படுவதுடன் சுகாதார கேடு ஏற்படுகின்றது. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நச்சுப் பதார்த்தங்கள் நீருடன் கலப்பதனால் நீர்நிலைகளில் வாழும் கடல்வாழ் அங்கிகள் அதனால் பாதிப்படைகின்றன. கடல் உணவுகளை உட்கொள்ளும் மனிதர்களுக்கு இதனால் பலவிதமான நோய்கள் ஏற்படுகின்றன. இது மட்டுமல்லாமல் சில தேவைகளுக்காக மரங்களை வெட்டி செல்கின்றனர். இதனால் மழைவீழ்ச்சி குறைவடைகிறது. மழைவீழ்ச்சி குறைவடைவதனால் வரட்சி ஏற்படுகிறது. இதனாலும் பல உயிரினங்கள் இறக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகளை மனிதர்கள் மேற்கொள்வதனால் சுற்றுச்சூழல் மாசடைகிறது.

மேலும் சுற்றுச்சூழல் மாசடைவதை தடுக்க வேண்டுமானால் பல செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். எமது நகரத்தில் வசிக்கின்றவர்கள் நீர்நிலைகளிலும், பூங்காக்களிலும் குப்பைகளை வீசுவதை கண்டால் நாம் உடனடியாக மாநகரசபையிடம் அறிவிக்க வேண்டும். மேலும் நீர்நிலைகளில் குப்பை வீசுவதை நாம் முற்றாக தவிர்த்து கொள்ள வேண்டும். அத்தோடு தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர்களை நீர் நிலைகளில் சேராது தடுக்க வேண்டும். மேலும் குப்பை கூழங்களை எரிப்பவர்களால் அந்த குப்பை கூழங்களிலிருந்து வெளியேறும் புகை வளிமண்டலத்தில் சேர்ந்து வளி மாசடைகின்றது. இதனால் சுவாசம் தொடர்பான நோய்கள் ஏற்படுகிறது. ஆகவே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் மனிதர்களுக்கு அறிவுரை வழங்கி அவர்களை தடுக்க வேண்டும். மேலும் தேவையில்லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மரங்களை வெட்டுவதை தடுத்து மரநடுகையினை ஊக்குவித்தல் வேண்டும். நாம் இவ்வாறு செயற்படுவதனால் அனைவரும் விரும்பதக்க அழகான சுற்றுப்புறச்சூழலை உருவாக்க முடியும். ஆகவே சூழலை பாதுகாப்போம் தொற்று நோய்களிலிருந்து நம்மை பாதுகாப்போம்.

K.டானியா
பொது நூலக வாசகர்
பாரதிலேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இன்றைய மாணவர்களின் நெறி தவறிய செயல்கள்

இன்றைய சமூகத்தில் பல மாணவர்கள் நெறி தவறிய செயல்கள் பலவற்றை செய்கின்றனர். இதனால் எதிர்கால சமூதாயத்தில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைகின்றது. இன்றைய தலைமுறையில் உள்ள மாணவர்கள் நவீன மயமான உலகத்தில் வாழ்கின்றனர். இந்த நவீன மயமான உலகத்தில் வாழ்வதனால் பல்வேறு நெறி தவறிய செயல்களில் ஈடுபடுகின்றனர். உதாரணமாக தொலைபேசி மூலம் நெறி தவறிய செயல்களில் ஈடுபடுகின்றனர். இதனால் பல்வேறு இன்னல்கள் ஏற்படுகின்றன. சில விடயங்களுக்கு அடிமை ஆகுவதனால் சில தவறான முடிவுகளையும் எடுக்கின்றனர். நெறி தவறி செயற்படுவதனால் மாணவர்களின் எதிர்கால இலட்சியம் பாதிக்கப்படுகின்றது.

அதாவது இன்றைய மாணவர்கள் பொழுதுபோக்கு செயற்பாடுகளாக தொலைபேசியில் கேம்ஸ் விளையாடுதல் மற்றும் தொலைபேசியில் தேவையற்ற விடயங்களை பார்த்தல் போன்ற மிகவும் பிழையான செயல்களில் ஈடுபடுகின்றனர். ஆனால் அன்றைய சமூதாயத்தில் வாழ்ந்தவர்கள் பொழுதுபோக்காக வீட்டுத்தோட்டம் செய்தல் மற்றும் புத்தகங்களை வாசித்தல் போன்ற செயல்களை மேற்கொண்டனர். இதனால் அன்றைய காலத்தில் வாழ்ந்தவர்கள் இவ்வாறான நெறி தவறிய செயற்பாடுகளில் ஈடுபடவில்லை. அது மட்டுமன்றி இன்றைய மாணவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதில் அதிக ஈடுபாடுடையவர்களாக காணப்படுகின்றனர். இதனால் தொலைக்காட்சி திரைப்படங்களில் வரும் அடித்தல், கொலை செய்தல், மதுப்பாவனை என்பவற்றை பார்த்து இன்றைய மாணவர்கள் இவ்வாறான தவறான நெறி தவறிய செயல்களில் ஈடுபடுவதென்பது குறைவாகவே காணப்பட்டன. இவ்வாறு தவறான செயல்களில் ஈடுபடுவதனால் மாணவர்களின் குடும்பங்களில் பல விதமான பிரச்சினைகளை முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

மாணவர்களை இவ்வாறான நெறி தவறிய செயல்களில் இருந்து பாதுகாப்பதற்காக இந்த சமூதாயத்தில் பல வகையான நிறுவனங்கள், அமைப்புக்கள் நிறுவப்பட்டுள்ளன. இன்றைய மாணவர்களை தொலைபேசி பார்வையிடுவதை தடுப்பதற்காக அவர்களுக்கு விரும்ப கூடியதுமான விளையாட்டுக்கள் மற்றும் அழகியற் செயற்பாடுகள் போன்றவற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈடுபடுத்துவதற்கு அதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தவறான வழிகளில் செல்லும் மாணவர்களை மீட்டெடுக்க முடியும். இது மட்டுமல்லாது வீடுகளில் அதிகமாக தொலைக்காட்சி பார்வையிடும் மாணவர்களை குடும்ப அங்கத்தவர்களே இணைந்து விளையாட்டு மைதானம் மற்றும் சமூக சேவைசெயற்பாடுகளில் ஈடுபட தூண்டுதல் வேண்டும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவகனால் தொலைக்காட்சி, தொலைபேசி போன்றவற்றுக்கு அடிமை ஆகியிருக்கும் மாணவர்களை மீட்டெடுக்கமுடியும்.



K.கிறிஸ்டினா
பொது நூலக வாசகர்
பாரதிலேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசிப்பின் அவசியம்

பள்ளியில் தினமும் பலவிதமான புத்தகங்களை படிக்கின்றோம். அவை அந்தந்தப் பாடங்கள் சம்மந்தப்பட்டவையாகும். இவற்றை படித்து விட்டு நான் தினமும் படிக்கின்றேன். என்றால் சரியாகுமா? பள்ளிப் பாடங்கள் மட்டும் நம் அறிவை வளர்க்காது. பாடங்கள் சம்மந்தப்பட்ட மேலும் பல தகவல்களைப் பெற நாம் வேறு பல நூல்களை வாசிக்க வேண்டியது அவசியமாகின்றது. ஒரு மொழியில் புலமை பெற அம் மொழியில் வெளிவந்துள்ள பல புத்தகங்களை வாசிக்க வேண்டும். அவற்றை வாசிப்பதனால் அம் மொழியில் நாம் புலமை பெற முடியும்.

மொழி வளத்தைப் பெருக்கி கொள்ள முடியும். ஒரு மொழியில் உள்ள பல புதிய சொற்களை அறிய அம் மொழி நூல்களை வாசிக்க வேண்டும். அத்துடன் அவற்றின் பொருளை உணர்ந்து சரியான முறையில் பயன்படுத்தவும் வாசிப்பு அவசியமாகிறது. மொழி வளத்தைப் பெருக்கும் அதே வேளையில் பொது அறிவையும், வாசிப்பதன் மூலம் வளர்த்துக் கொள்ள முடியும். பல துறைகளைச் சார்ந்த புத்தகங்களை வாசிப்பதனால் அத்துறைகளைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள முடிகிறது. இதன் மூலம் நாம் தகவல் அறிந்த சமுதாயமாக மாற வாசிப்பு துணைபுரிகிறது. இந் நவீன உலகில் மனிதன் இயந்திரமாக வாழ வேண்டிநிலை ஏற்பட்டள்ளது.

இவ் இயந்திர வாழ்க்கையிலிருந்து மீண்டும் மனமகிழ்வு பெறவும் வாசிக்கும் பழக்கம் உதவுகிறது. கதை, கட்டுரை, கவிதை செய்யுள் போன்றவற்றை வாசிப்பதன் மூலம் அவற்றின் சுவையை உணர்ந்து இரசிப்பது மனம் மகிழ்கின்றது. வாசிப்பு கற்பனை மற்றும் படைப்பாற்றலைத் தூண்டுகிறது. இது புதிய உலகங்கள் கதாபாத்திரங்கள் மற்றம் காட்சிகளை கற்பனை செய்ய உங்களை அனுமதிக்கிறது. புத்தகங்கள் மனித அனுபவத்தினை பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகின்றன. அவை வெவ்வேறு கலாச்சாரங்கள் முன்னோக்குகள் மற்றும் உணர்ச்சிகளுக்கு ஒரு சாளரத்தை வழங்குகின்றன.

நம்மில் பலரும் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. ஆனால் எந்த புத்தகத்தை வாங்குவது? வாங்கினால் நம்மால் படிக்க முடியுமா? பாதியில் படிக்காமல் விட்டுவிடுவோமா? தினமும் படிப்பதற்கு நேரம் ஒதுக்க முடியுமா? என்று பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கேள்விகள் நம் மனதிற்குள் தோன்றுவதினால் வாசிக்கும் பழக்கத்தை நாம் தள்ளிப் போடுகிறோம். இவ் கேள்விகளுக்காக விடை என்ன தெரியுமா? உடனடியாக நீங்கள் வாசிக்க நினைக்கும் புத்தகத்தை வாங்கி விடுங்கள் அல்லது நூலகத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்.

அதை உங்கள் கண்பார்வைபடும் இடத்தில் வையுங்கள். ஒரு வாசகன் அவன் இறப்பதற்கு முன்னால் ஆயிரம் முறை வாழ்ந்து விடுகின்றான் என்று ஒரு வாசகம் சொல்கிறது. அதற்குள் அதை வாசித்து விடுங்கள். அப்படி என்னதான் இருக்கிறது இந்த புத்தக வாசிப்பில் அறிவு மற்றும் கற்றல், புத்தகங்கள் அறிவின் பிறப்பிடம் அவை பல்வேறு பாடங்களில் பரந்த அளவிலான தகவல்களை வழங்குகின்றன. உலகத்தைப் பற்றிய உங்கள் புரிதலை விரிவுபடுத்தவும் புதிய திறன்களைப் பெறவும் பல்வேறு துறைகளில் நிபுணத்துவத்தை வளர்க்கவும் உங்களை அனுமதிக்கிறது.

சொல்லகராதி மற்றும் மொழித்திறன் பற்றிய பல்வேறு எழுத்தாளர்களின் புத்தகங்களை நாம் வாசிக்கும் பொழுது வெவ்வேறு வகையான எழுத்து நடைகள் நமக்கு அறிமுகமாகிறது. இது நம் சொல்லகராதி மற்றும் மொழித்திறனை மேம்படுத்த உதவுகிறது. வாசிப்பு என்பது நம் மூளைக்கு உடற்பயிற்சி போன்றது. அது நம் நினைவாற்றலை அதிகபடுத்துவதற்கும் நாம் அதிகம் கவனம் செலுத்துவதற்கும் உதவுகிறது. அதுமட்டுமல்லாது நம் சிந்தனையை ஊக்குவிக்கிறது மற்றும் சிக்கலைத் தீர்க்கும் திறன்களை வளர்க்க உதவுகிறது எனலாம்.

வாசிப்பு அறிவை மேம்படுத்தி மொழியறிவை வளர்த்து மனதை ஒருமுகப்படுத்தி சிந்திக்கும் திறனை உயர்த்தும் ஒரு சிறந்த செயற்பாடாகும். இது மன அழுத்தத்தைக் குறைத்து பொது அறிவை விரிவுபடுத்தி தனிப்பட்ட வளர்ச்சிக்கு உதவுகிறது. ஒரு நவீன சமூகத்தில் இயந்திரத்தனமான வாழ்க்கையிலிருந்து விடுபட்டு மனமகிழ்வு மற்றும் மகிழ்ச்சியைப் பெற வாசிப்பு உதவுகிறது. வாசிப்பின் மூலம் பல்வேறு துறைகளைப் பற்றிய பொது அறிவைப் பெறலாம். இது அறிவு சார் உலகத்தைப் புரிந்து கொள்ளவும் உதவுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசிப்பு மொழியின் வளத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. வாசிப்பு மூளையைச் சுறுசுறுப்பாக்கும், கவனச் சிதறலைக் குறைத்து சிந்திக்கும் திறனை மேம்படுத்துகின்றது. "வாசிப்பு" என்பது தனிப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் மதிப்புக்கள் பற்றிய நுண்ணறிவைப் பெறவும், சுய விழிப்புணர்வை வளர்க்கவும் உதவுகிறது. தற்கால இலக்கியப் போக்குகளை அறிந்து கொள்ளவும் வாசிப்பு அவசியம்.

வாசிப்பு என்பது வெறும் எழுத்துக்களைப் படிப்பது மட்டுமல்ல, அது தமது முழுமையான வளர்ச்சிக்கு அவசியமான ஒரு திறனாகும். வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்வதன் மூலம் நாம் அறிவார்ந்த மகிழ்ச்சியான மற்றும் நிறைவான வாழ்க்கையை வாழ முடியும். வாசிப்பின் ஊடாகவே ஒருவன் பூரண மனிதனாகலாம். வாசிப்பதன் ஊடாக அறிவுடைய சமூகத்தை உருவாக்க முடியும்.

வாசிப்பின் ஊடாகவே அறிவுசார் உலகத்தைப் புரிந்து, அதனோடு சேர்ந்து போகலாம். இலக்கியங்களைப் படைக்கவும் வாசிப்பு மிகவும் அவசியமானது. பண்டைக் காலத்தில் தமிழையும் தமிழ் இலக்கியங்களையும் சங்கம் வளர்த்து பாதுகாத்தவர்கள் தமிழர்கள். இலங்கையில் மட்டுமல்ல, புலம்பெயர் நாடுகளிலும் தமிழ்ப்பணியை எம்மவர்கள் திறம்படச் செய்து கொண்டிருக்கின்றனர்.

தமிழ் மொழியைப் பொறுத்தவரை நிறைய நூல்கள் வெளிவருகின்றன. அவை எல்லாம் தரமானவையா என்ற கேள்வி எழுகின்றது. காலத்தைக் கடந்த இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டும். அது எமது நாட்டு எழுத்தாளர்களினாலும் எதிர்கால சமுதாயத்தாலும் நிச்சயம் முடியும். தற்காலத்தில் சில ஊடகங்களும், சில எழுத்தாளர்களும் தமிழ் மொழியை சரியாக எழுதவோ, உச்சரிக்கவோ தெரியாதவர்களாக இருக்கின்றனர். சரியென்று எண்ணிக்கொண்டு தவறான சொற்பிரயோகங்களை பிரயோகிக்கின்றனர்.

இதற்குக் காரணம் தமிழ்மொழிப் பயிற்சி மக்களிடையே மிகக்குறைவாக இருப்பதும் ஆங்கில மொழியின் மோகமாகவும் இருக்கலாம். எல்லோரும் நூல் வெளியிடுவது போல் நாமும் வெளியிட வேண்டும் என நினைக்கக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தரமான நூல்களைப் படைக்க வேண்டும். "உன் நண்பன் யார் என்று சொல் நீ யார் என்று சொல்கிறேன்" என்ற வாசகத்தை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதுபோலத் தான் புத்தகம் என்னும் நண்பனுடன் நீங்கள் பழகிய பின்பு நீங்கள் யார் என்பதை நீங்களும், சமூகமும் புரிந்து கொள்ளும் எனவே வாசிப்பு மிகவும் அவசிமானது.

ஜெ. அபிநயா
பாரதிலேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சின்னக் குழந்தையின் வேதனை

ஓர் அழகான நகரம். அந்த நகரத்தில் ஓர் அப்பா அம்மா மற்றும் அவர்களுக்கு ஓர் அழகான குழந்தை என மூவர் வாழ்ந்து வந்தனர். அந்த சுட்டிக் குழந்தை எப்போதும் பெற்றோரின் சொற்களைக் கேட்பதில்லை. குறும்புத்தனத்துடன் விளையாடிக்கொண்டிருந்தது.பாடங்களில் கவனம் செலுத்துவதில்லை.ஆசிரியர்களுக்கு மதிப்பளிப்பதில்லை என பல குறும்புகளை செய்தது.இதனால் பெற்றோருக்கு அக்குழந்தை மீது வெறுப்புண்டாகிற்று.அக்குழந்தைக்கு அவர்கள் அடிப்பதும் ' திட்டுவதுமாக இருந்தனர்.தவறு அக்குழந்தை மீது மட்டுமல்ல பெற்றோர்கள் கூட அக்குழந்தை பற்றிய கவனமின்றி எப்போதும் தொலைபேசி , வேலை என தமது வாழ்க்கையை அவற்றில் மட்டும் செலவிட்டார்கள். இதனால் அக்குழந்தை தானாக தனது போக்கில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டது.

பல பாடசாலைகளில் அக்குழந்தையை சேர்த்தும் அப்பாடசாலைகளில் ஆசிரியர்கள் அதிபர் என எல்லோரும் அக்குழந்தை பற்றிய முறைப்பாடுகளுடன் பாடசாலையை விட்டு வெளியேற்றி விட்டனர். இதனால் பெற்றோர்கள் பல வைத்தியர்களைப் பார்த்தனர். என்ன பிரச்சினை என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே அவர்கள் அக்குழந்தையை என்ன செய்வதென்று தெரியாமல் வேதனையில் காணப்பட்டனர். ஒருநாள் அக்குழந்தையின் குறும்புத்தனம் தாங்காமல் அக்குழந்தைக்கு அவர்கள் அடித்துவிட்டனர். இதனால் அக்குழந்தை அழுதுகொண்டே வீட்டைவிட்டு வெளியேவந்து ஓரிடத்தில் அமர்ந்து அழுதுகொண்டு இருந்தது. அப்போது அவ்விடத்திற்கு இருசிறுவர்கள் வந்தனர்.அவர்கள் அக்குழந்தையினிடத்து ஏன் அழுகிறாய் என வினவிய போது அக்குழந்தை தனது பெற்றோர்கள் தனக்கு அடித்து விட்டார்கள் என கூறியது. அப்போது அச்சிறுவர்கள் இருவரும் அக்குழந்தைக்கு சமாதானம் கூறி அவர்களது வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். தனது தாய் தந்தையர் மிகவும் நல்லவர்கள் எனவும் தங்களுக்கு எப்போதும் அடிப்பதில்லை எனவும் சிறுவர்கள் இருவரும் கூறினார்கள்.

அச்சிறுவர்கள் அவர்களது வீட்டிற்கு அக்குழந்தையை அழைத்து வந்தனர். அப்போது சிறுவர்களின் பெற்றோர் இவர்களிடத்தில் யார் இது? என வினவினர். அச்சிறுவர்கள் தனது நண்பர்கள் எனக்கூறி அவரை உள்ளே அழைத்துச்சென்று அக்குழந்தைக்கு அருந்த குளிர்பானம் கொடுத்தனர். பின்னர் பெற்றோர்கள் தமது குழந்தைகளிடம் நடந்தவற்றை வினவினர். இவருக்கு இவரது தாய் தந்தையர் அடித்துவிட்டார்கள் என பதிலளித்தனர். அப்பெற்றோர்கள் அக்குழந்தைக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி அக்குழந்தையுடன் தமது நேரத்தை அவர்கள் அனைவரும் செலவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இச்சந்தர்ப்பத்தில் குழந்தையைக்காணவில்லை என பெற்றோர்கள் பதற்றத்துடன் தேடிக்கொண்டிருந்தனர். அக்குழந்தை மகிழ்ச்சியுடன் தனது நண்பர்களின் பெற்றோருடனும் நண்பர்களுடனும் தனது வீட்டிற்கு வந்தது. அங்கு குழந்தையைக் கண்ட பெற்றோர்கள் தனது குழந்தையை வாரி அணைத்துக் கொண்டனர். அப்போது அந்த சிறுவர்களின் பெற்றோர் கூறினார்கள் உங்கள் குழந்தை நீங்கள் அடித்து விட்டீர்களாம் என்று மிகவும் வேதனைப்பட்டது. அத்துடன் உங்கள் குழந்தையை எங்கள் குழந்தைகள் படிக்கும் பாடசாலையில் விட்டால் அது உங்கள் குழந்தைக்கு மகிழ்ச்சியைத்தரும் என்று கூறினார்கள். அக்குழந்தையும் அழுது கெஞ்சிக் கேட்டதால் அவர்கள் அப்பாடசாலையில் சேர்ப்பதற்கு சம்மதித்தனர்.

அக்குழந்தையும் மகிழ்ச்சியுடன் அப்பாடசாலைக்கு தன் புதிய நண்பர்களுடன் சென்றது. அங்கு ஆசிரியர் எல்லோருக்கும் மிக அன்பாகவும் மகிழ்ச்சியாகவும் பாடத்தைக் கற்பித்தார். அக்குழந்தைக்கு அப்பாடசாலையை மிகவும் பிடித்திருந்தது. ஒருநாள் அந்த ஆசிரியர் மாணவர்களிடம் நீங்கள் என்னவாக வரவிரும்புகின்றீர்கள் என கட்டுரை எழுதும்படி கூறினார். எல்லோரும் தமது ஆசைகளை கட்டுரை மூலம் வெளிப்படுத்தினர்.ஆனால் அக்குழந்தையோ தனது கவலையை அக்கட்டுரை மூலம் வெளிப்படுத்தியது. எல்லோரது கட்டுரையையும் வாசித்த ஆசிரியர் அக்குழந்தையின் கடடுரையை வாசித்து மனமுடைந்து போனார். அந்தக்கட்டுரையில் அந்தக் குழந்தை தான் ஒரு தொலைபேசியாக மாற வேண்டும் என எழுதியிருந்தது. ஏனெனில் அப்போது தான் தனது பெற்றோர்கள் அதிக நேரத்தை அக்குழந்தையிடத்து செலவிடுவார்கள் என எழுதியிருந்தது. அதனை அந்த ஆசிரியர் அக்குழந்தையின் பெற்றோர்களிடத்து காட்டிய போது அவர்கள் மனமுடைந்துபோய் எம்மால்தான் அக்குழந்தை தவறான வழியில் சென்று விட்டது என்றும் நாம் செய்த தவறிற்கு அந்த அப்பாவிக்குழந்தையை தண்டித்து விட்டோமே என அழுதனர். அன்றிலிருந்து தொலைபேசியை ஒதுக்கி விட்டு முழு நேரத்தையும் தமது பிள்ளையுடன் செலவிட்டனர். அன்றிலிருந்து அக்குழந்தை நல்ல பிள்ளையாகவும் ஆசிரியர் , பெற்றோர்களுக்கு மதிப்பளிக்கும் புத்திசாலிக் குழந்தையாகவும் மாற ஆரம்பித்தது.

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட கதை உருவாக்கள் போட்டியில் 1 ஆம் இடம் பெற்ற கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசிப்பு மனிதனை உயர்த்தும்

முன்னொரு காலத்தில் நாகபட்டினம் எனும் ஊரில் அறிவழகன் என்ற சிறுவன் வாழ்ந்து வந்தான். அவன் தனது பெயருக்கு ஏற்ப அறிவும், அழகும் நிறைந்தவனாய் இருந்தான் ஆனால் அவனுக்கு நூல்கள் பற்றிய அறிவு இல்லை. வாசிப்பதில் விருப்பில்லாதவனாய் இருந்தான். அவனது வாசிப்பு மட்டத்தைக்கண்டு அவனது பெற்றோர்கள் மிகவும் வருந்தினர் அறிவழகனை வாசிப்பில் விருப்புக்காட்ட வைப்பதற்கு பல முயற்சிகளில் ஈடுபட்டனர்.ஆனால் அவனோ வாசிப்பில் விருப்புகாட்டவில்லை.

ஒரு நாள் அறிவழகனின் வீட்டிற்கு அவனது நண்பர்கள் வந்திருந்தனர். அவர்கள் வாசிப்பதில் மிகவும் ஆர்வமுடையவர்களாயிருந்தனர். இதனையறிந்த அறிவழகனின் பெற்றோர் அவனது நண்பர்களுடன் இணைந்து அறிவழகனை வாசிப்பில் ஆர்வமுடையவனாக்குவதற்கு ஒரு திட்டம் தீட்டினர்.சில நேரம் கழித்து அறிவழகனின் பெற்றோர் அவனுக்கும் நண்பர்களுக்குமிடையில் ஒரு வாசிப்புப் போட்டியை வைத்தனர். அதில் அறிவழகனை விட அவனது நண்பர்கள் மிகவும் நன்றாக வாசித்தனர். இதனை அவதானித்த அறிவழகன் தன் மீது வெட்கம் கொண்டு , தானும் தனது நண்பர்களைப் போல் நன்றாக வாசிக்க வேண்டும் , அதற்காக தனது நண்பர்களின் உதவியுடன் வாசிக்க பழக வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.

சில நாட்களில் அவன் மிகத்தெளிவாக வாசிக்கப்பழகினான். வாசிப்பை அவனது பொழுது போக்காக மாற்றிக்கொண்டான். அறிவழகன் தனது வாலிபப்பராயத்தில் நூல்களை எழுதினான். நூல்களை எழுதுவதில் ஒரு மிகச்சிறந்த எழுத்தாளராக விளங்கினான்.அவன் எழுதிய நூல்களுக்கு அளவேயில்லை.ஒரு நாள் அவன் திண்ணையில் அமர்ந்து கொண்டிருக்கும் போது அவனுக்கு ஒரு சிந்தனை தோன்றியது. அச்சிந்தனை என்னவென்றால் யான் இந்நிலையிலிருக்க காரணமானது எது? எனச் சிந்தித்தான். அவ்வேளையில் அவனது சிறு வயது நண்பர்கள் அவனை சந்திக்க வந்தனர். அவன் சிந்தித்ததை அவர்களிடம் வினவினான். அவர்கள் அதற்கு " நீ சிறு வயதில் வாசிக்க முயற்சி செய்தாய். அன்றிலிருந்து உனது வெற்றிக்கான படி உருவானது " என்று பதிலளித்தனர்.

சில நாட்களின் பின் நூல்களை உருவாக்கும் போட்டி ஒன்று அறிமுகமானது. அதில் அறிவழகனும் கலந்து கொண்டான். அப்போட்டியில் அறிவழகனைப் போல் வேறு சில எழுத்தாளர்களும் கலந்துகொண்டனர். முதலாம் இடத்தை அடைபவர்களுக்கு " சிறந்த எழுத்தாளி " என்ற பட்டமும் நூறு பொற்பாசுகளும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதைக் கேட்ட அறிவழகன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். சில மணிநேரங்களின் பின் போட்டி ஆரம்பமானது. அறிவழகன் சிறந்த நூலொன்றை எழுதி நடுவர்களிடம் ஒப்படைத்தான். அதை வாசித்த நடுவர்கள் " ஏனையவர்களின் நூலைவிட மிகச்சிறந்ததாய் உள்ளது " என முடிவுசெய்து அறிவழகனுக்குப் பட்டத்தையும், பொற்காசுகளையும் வழங்கினர். அன்றிலிருந்து அவன் புரிந்துகொண்டான் , வாசிப்பினால் ஒருவன் எவ்வளவு உயர்வடைகின்றான் என்பதை.

ஓயாது வாசிப்போம் வாழ்வில் உயர்வடைவோம்

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தபட்ட கதை உருவாக்கள் போட்டியில் 2 ஆம் இடம் பெற்ற கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு

ஒரு ஊரில் அழகிய கிராமம் ஒன்று இருந்தது. அக்கிராமம் எழில் சோலை மிகுந்த கிராமமாக காணப்பட்டது. அங்கு பூக்களும் , மரங்களும் நிறைந்து காணப்பட்டது. அது ஒரு அழகிய காட்சியாக இருந்தது. அக்கிராமம் நாகபுரி எனும் அழகிய பெயர் கொண்டு அழைக்கப்பட்டது. அந்த அழகிய கிராமத்தில் ஒரு ஏழையான குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது.

அக்குடும்பத்தில் ரவியும் , மாலதியும் மற்றும் அவர்களின் இருபிள்ளைகளும் மட்டுமே வாழ்ந்து வந்தனர். அவர்களிடம் ஒரு வேளை உணவு உண்பதற்கான வசதிகூட காணப்படவில்லை. அவர்கள் விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தனர். ஆனால் ரவியின் உறவினர்கள் அனைவரும் பெரும் செல்வந்தர்கள். மற்றும் கல்வியில் மேலானவர்கள். ஆனால் அவர்கள் ரவியின் குடும்பத்தை கவனிப்பதேயில்லை. ஏனென்றால் அவர்களிடம் செல்வமும் இல்லை, கற்பதற்கான வசதியும் இல்லை என்பதனால் ஆகும்.

ரவியின் இருபிள்ளைகளும் கமலா, விமலா ஆவர். ரவியிடம் கற்பதற்கான வசதி இல்லாவிடினும் இவரின் பிள்ளைகள் இருவருக்கும் கற்பதில் பெரும் ஆர்வம்.ஆனால் அவர்களை இக்கிராமத்தில் எவரும் மதிப்பதேயில்லை. ஏனெனில் அவர்கள் ஏழையானவர்கள் என்பதால் ஆனால் அவர்கள் எப்போதும் நாம் ஏழையானவர்கள் என்று நினைப்பதேயில்லை. கமலாவும் விமலாவும், கல்வியிலையே தனது சிந்தனையை நோக்கினார்கள். அவர்கள் செல்லும் பாடசாலையிலும் அவர்களை ஒருவரும் மதிப்பது கூட இல்லை. ஆனால் கமலாவும், விமலாவும் அதை சிந்திக்காமல் அவர்கள் வகுப்பறையில் இருந்து பாடங்களைக் கற்றார்கள். அப்படியே நாட்கள் சென்றன.அவர்களுக்கான பரீட்சை நெருங்கியது. கமலாவும், விமலாவும் மிகவும் வேகமாக தங்களை பரீட்சைக்கு தயாராக்கினார்கள்.ஆனால் அவர்களின் நண்பர்கள் பரீட்சைக்கு தயாராகவே இல்லை. மறுநாள் பரீட்சை ஆரம்பமானது. கமலாவும், விமலாவும் பரீட்சைக்கு தாயாரான நிலையில் சென்றார்கள். பரீட்சை ஆரம்பமானது. பரீட்சையை மிகவும் அழகாக எழுதினார்கள். பரீட்சை முடிவடைந்தது.

சில நாட்களின் பின் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளிகள் கிடைத்தன.கமலாவும் விமலாவும் பரீட்சையில் சித்தியடைந்தார்கள். ஆனால் அவர்களின் நண்பர்கள் அனைவரும் சித்தியடையவில்லை. கமலாவையும், விமலாவையும் பார்த்து அவர்களின் நண்பர்கள் ஏழையானோர் என்று சொல்லிக்கொண்டு இருந்தார்கள். ஆனால் அவர்கள் அதை சிந்திக்காமல் அவர்களின் பெற்றோர்களிடம் வந்து சொன்னார்கள் ரவியும் மாலதியும். மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். இப்படியே காலங்கள் சென்றன. கமலாவும் விமலாவும் உயர்தரம் கற்றார்கள். கற்கும் போது அவர்களின் பெற்றோரிடம் அவர்களின் சிறு வயதில் அவர்களின் நண்பர்கள் கதைத்த எல்லாவிடயங்களையும் சொன்னார்கள். ரவியும், மாலதியும் மிகவும் கவலையடைந்த நிலையில் காணப்பட்டார்கள்.

கமலாவும் விமலாவும் உயர்தரப் பாடங்களைக் கற்றார்கள். அவர்களின் உயர்தரப் பரீட்சையும் நெருங்கியது. மிகவும் நன்றாக கற்றார்கள். அவர்களின் நண்பர்களும் கற்றார்கள். மறுநாள் பரீட்சை ஆரம்பமானது. கமலாவும், விமலாவும் பரீட்சைக்குச் சென்று பரீட்சையை எழுதினார்கள். பரீட்சை முடிவடைந்தது. நாட்கள் சென்றன. பின்னர் பரீட்சைக்கான முடிவுகள் கிடைக்கப்பெற்றன. பரீட்சையில் கமலாவும், விமலாவும் சித்தியடைந்து மருத்துவத்துறைக்கு தெரிவானார்கள். அவர்களின் நண்பர்கள் தோல்வியடைந்தார்கள். அவர்களின் தவறை உணர்ந்து கொண்டார்கள். ரவியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குடும்பத்தை அவமதித்த மக்கள் அவர்களை கௌவித்தனர். இதிலிருந்து கற்றோனுக்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு என்பதனைப் புரிந்து கொள்ள முடியும்.

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தபட்ட கதை உருவாக்கல் போட்டியில் 2 ஆம் இடம் பெற்ற கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசிப்பு உயர்வு தரும்

முன்னொரு காலத்தில் மகிழூர் எனும் சிறிய ஊரில் பத்மினி எனும் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவி வாழ்ந்து வந்தாள்.இவளது தாய் விமலாவும் தந்தை நாகநாதனும் ஆவர்.இவளது தாயான விமலா ஒரு சிறிய விபத்திற்கு உள்ளாகி அவரது ஒரு காலை இழந்துவிட்டார். ஆனால் விமலாக்கு தமிழ் மீது தீராத பற்று இருந்தது. அவளுக்கு வாசிப்பது என்றாலே சுறுசுறுப்பாகிவிடுவாள். இவளது காலை இழந்தாலும் அவள் எல்லாவேலைகளையும் செய்தாள். பத்மினியின் தந்தையான நாகநாதன் ஒரு விவசாயி. அவர் அவரது கிராமத்தில் உள்ள மிகப்பெரிய செல்வந்தரின் வயலில்தான் குத்தகைக்கு வேலைசெய்கிறார். ஆனால் இவர் ஒரு சிறந்த விவசாயி. ஆயினும் இவர் படிப்பறிவு அற்ற ஒரு மனிதர்.இவர் மற்றவர்களை ஒரு போதும் ஏமாற்ற நினைக்கமாட்டார்.மாறாக எல்லோரும் தான் இவரை ஏமாற்றுவார்கள்.இவருக்கு உழைப்புக்கு ஏற்ற கூலி கிடைப்பதில்லை.

பத்மினி அப்படியே தனது தாய்க்கு மாறாக உள்ளார். இவளுக்கு பாடசாலைக்கு செல்வதோ அல்லது கல்வி கற்பதோ இவள் விரும்பாத செயலாகும். இவளுக்கு ஆறுதல் கூறுவது இவளது தாத்தா. ஒரு வருடத்திற்கு முன் காலமானார். அன்றிலிருந்து அவள் பெரிய மன அழுத்தத்திற்கு ஆளானாள். இவள் யாருடைய பேச்சையுமே கேட்பது இல்லை.ஒரு நாள் இவள் பாடசாலைக்குச் சென்ற போது வழக்கமாக வரும் தமிழ் ஆசிரியரை தவிர்த்து வேறுபுதிய தமிழ் ஆசிரியர் இவளது வகுப்பிற்கு வந்தார். இவளது எண்ணம் " இவர் என்னை ஒரு கேள்வியும் கேட்கமாட்டார்" என்று சிந்தித்தார். ஏன் என்றால் இவளுக்கு தமிழ்ப்பாடமே பிடிக்காது. ஒரு நாள் இவளது ஆசிரியர் தேசிய வாசிப்புமாத வாசிப்புக்காக எல்லோரது வாசிப்பையும் பார்த்துக்கொண்டிருந்தார். அந்த ஆசிரியர் இவளை எழுப்பி வாசிக்கச் சொன்னார். இவள் திக்கி திக்கி வாசித்தாள். இவள் வாசிக்கச் சிரமப்படுவதை பார்த்த ஏனைய மாணவர்கள் வாய்விட்டுச் சிரித்தனர். இதனைப்பார்த்த பத்மினி மனம் உடைந்து போனாள்.இவள் கண் கலங்கியபடி தனது ஆசனத்தில் அமர்ந்தாள். இடைவேளை மணியும் அடித்தது இவளுடன் சேர்ந்து உணவு உண்ண வரும் அவளது நண்பியும் அன்று வரவில்லை.

மறுநாள் பத்மினி பாடசாலைக்குச் சென்றாள். வழக்கமாக அவளுக்கு அருகில் அமரும் அவளது உயிர்த்தோழியும் வழமைக்கு மாறாக வேறு இடத்தில் அமர்ந்தாள். பத்மினியுடன் அவளது நண்பி முகம்கொடுத்து பேசவில்லை. பத்மினி "ஏன் என்னுடன் நீ பேசமறுக்கிறாய் ?" என்று கேட்டாள். அதற்கு அவளது நண்பியான சரண்யா சொன்னாள் "வாசிக்கத் தெரியாதவர்களுடன் நான் பேசுவதாக இல்லை" என்றாள். இதனைக் கேட்ட பத்மினி இரண்டாவது முறையாக மனம் உடைந்து போனாள். அன்றைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாடசாலை நாள் முழுவதும் யாரும் அவளுடன் பேசவில்லை.அவள் பாடசாலை முடிந்ததும் நேரடியாக அவளது தாத்தாவின் கல்லறைக்குச் சென்ற அவள் தனது வருத்தங்களைச் சொல்லி கதறி கதறி அழுதாள். அவள் அழுததில் அவளது கண்கள் சிவந்து விட்டது. அவள் ஒன்றும் தெரியாதது போல் வீடுதிரும்பினாள்.

அவள் வேகமாக வீட்டிற்கு வந்து முகத்தை நீரால் கழுவினாள். வீட்டில் சமைத்துக் கொண்டிருந்த தாயிடம் ஒன்றும் தெரியாதது போல் பேசினாள். இவளது குரல் மாறியிருப்பதை தாயார் கண்டார். பத்மினியிடம் "நீ அழுதாயா?" என்று கேட்டாள். பத்மினியின் கண்கள் அங்குமிங்கும் பார்த்தது.தாய் கேட்ட கேள்விக்கு பத்மினி "இல்லை" என்று பதில் கூறினாள்.தாய் "பொய் சொல்லாதே" என்றார். பத்மினியின் கண்கள் கலங்கின.என்ன நடந்தது? என்று தாய் விசாரிக்க ஆரம்பித்தார்.அப்போது பத்மினி நடந்ததையெல்லாம் கூறி அழுதாள். தாய் கூறினாள் "உன்னால் வாசிக்க முடியவில்லை என்றால் அது உன் இயலாமைதான்" என்றார் தாய். அதற்கு பத்மினி "ஆம் , அம்மா எனக்கு புரிந்துவிட்டது" என்றார். அவள் தாயிடம் பேசிய பின்பு ஓர் புதிய புத்துணர்ச்சி கிடைத்தது போல் இருந்தது.

மறுநாள் அவள் என்றும் இல்லாதது போல் மிகவும் புத்துணர்ச்சியுடன் பாடசாலை சென்றாள்.அன்று அவளது தமிழ்ப்பாட ஆசிரியர் வாசிப்பு மாதத்திற்கு வாசிப்பு போட்டிக்காக "ஐந்து மாணவர்கள் பெயர் தாருங்கள்" என்று கூறினார். பத்மினி சற்று தயங்கியபடி கையை உயர்த்தினாள்.அதனைப்பார்த்த ஏனைய மாணவர்கள் அவளை கேலிசெய்து சிரித்தனர். அவளது ஆசிரியர் "அவளாள் இயலும் உங்களாள் முடியாது என்றாள் அமைதியாக இருங்கள்"என்று பத்மினிக்கு சாதகமாக கூறினார்.இதனைக்கேட்ட பத்மினி மகிழ்ச்சியுடன் பாடசாலை முடிவடைந்ததும் வீடு திரும்பினாள். மகிழ்ச்சியுடன் அவளது தாயிடம் அவள் போட்டிக்கு பெயர் கொடுத்தது பற்றி கூறினாள். அவளுக்கு அவளது தாய் தன்னம்பிக்கை வழங்கி அவளை ஊக்குவித்தார்.

அவளது தாய் பத்மினிக்கு பயிற்சிகளை வழங்கினார். தினமும் பயிற்சி வழங்கினார். இப்படியே நாட்கள் கழிந்தது போட்டி நாளும் வந்தது. அவள் ஆர்வத்துடன் பாடசாலை ரீதியாக நடைபெறும் வாசிப்புப் போட்டியில் கலந்து கொண்டாள். இவளை தாழ்த்தி பேசிய இவளது நண்பியும் அங்கு வந்திருந்தாள். எல்லோரும் வாசிக்க ஆரம்பித்தனர். எல்லோரும் இவளை பார்த்தனர். எல்லோரும் பிழைவிடும் ஒரு பந்தியில் இவள் இலகுவாக வாசித்துச் சென்றாள். போட்டியின் முடிவும் இரு நாட்கள் கழித்து அறிவிக்கப்பட்டது. முடிவின்படி பத்மினி முதலாம் இடத்தைப் பெற்றிருந்தாள். இவளால் இவளது பாடசாலைக்கு பெருமை கிடைத்துள்ளது என்று அதிபர், ஆசிரியர்கள் பெருமை அடைந்தனர். இந்த தகவல் இவளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெற்றோருக்கு தெரிந்தது. அவர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். அவளுடன் சேராத மற்றமாணவர்களும் இவளுடன் சேரத்தொடங்கினர். இதிலிருந்து எமக்கு என்ன விளங்குகிறது என்றால் வாசிப்பு எம்மை உயர்த்திவிடும்.

நன்றி

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தபட்ட கதை உருவாக்கள் போட்டியில் 3 ஆம் இடம் பெற்ற கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாழ்க்கைப் பாடங்கள்

இலங்கையில் வன்னிப் பிரதேசத்தை ஆண்டு வந்த பாரியேந்தன் என்ற மன்னன் ஒரு நாள் காட்டுக்கு வேட்டையாடுவதற்காக மந்திரிகளுடனும் படையினர் சிலரோடும் காட்டுக்கு சென்றிருந்தான். அங்கே சிங்கங்களையும் புலிகளையும் வேட்டையாடுவதற்காக ஆவலோடு சென்றிருந்த மன்னனுக்கு அன்று ஒரு மிருகங்களையும் காணமுடியவில்லை. வேட்டையாடாமல் வெறுங்கையுடன் செல்ல மன்னனுக்கு விருப்பமில்லை. அதனால் மன்னன் தன் மந்திரிகளுடனும் படையினருடனும் காட்டிற்குள் வெகுதூரம் சென்றுகொண்டிருந்த போது அரை வழித்தூரத்திலே மன்னனுடன் வந்தவர்கள் நின்று விட்டார்கள். மன்னன் மட்டும் தனியே காட்டுக்குள் மாட்டிவிட்டான்.சில மணி நேரங்களின் பின்னர் மன்னனுக்கு பசி ஏற்பட்டது. அப்போது மன்னன் பசியாலும் தாகத்தாலும் கிடந்து தவித்தான். அங்கே தூரத்தில் அதிகளவான ஆடுகள் புல் மேய்ந்து கொண்டிருப்பதை மன்னன் அவதானித்தான்.அதன் அருகில் சென்று அவதானித்த போது இடையன் ஒருவன் ஆடுகளை புல் மேய்ந்து கொண்டு இருந்தான்.மன்னன் அவனிடம் சென்று கேட்டான் தம்பி எனக்கு மிகவும் பசியாக உள்ளது. உன்னிடம் ஏதாவது உணவு உண்டா என கேட்டான். அப்போது இடையன் ஒன்றும் யோசிக்காமல் தான் உண்பதற்காக வைத்திருந்த உணவை அரசனிடம் கொடுத்தான்.மன்னன் அவ் உணவை வேகமாக உண்டான்.அரண்மனையில் அறுசுவை உணவுகளையும் உண்டு பழக்கப்பட்ட மன்னனுக்கு இடையனின் எளிமையான உணவை பசிக்கொடுமையால் விருப்பில்லாமலே உண்டான். ஆனாலும் இடையனின் நல்ல குணம் மன்னனுக்கு பிடித்தது. அதனால் இடையனின் நேர்மையை சோதித்துப் பார்க்க மன்னன் எண்ணினான் அதனால் இடையனைப்பார்த்து இடையனே நீ எனக்கு இந்த ஆடுகளிலிருந்து ஏதாவது ஒரு ஆட்டைமட்டும் எனக்கு தந்து விடு.நான் உனக்கு அதிக பொற்காசுகளை தருகின்றேன் எனக்கூறினான். அதுக்கு இடையன் தரமுடியாது என தலையை அசைத்தான். அதற்கு ஏனென்று மன்னன் இடையனைப்பார்த்து கேட்டான் அதற்கு இடையன் கூறினான் இந்த ஆடுகள் என்னுடையதல்ல. இவைஅனைத்தும் என் எஜமானுடையது அதனால் என்னால் தர இயலாது எனக் கூறினான். இடையனது பேச்சு மன்னனுக்கு அதிர்ச்சியையும் வியப்பையும் ஏற்படுத்தியது.ஒரு ஆட்டைமட்டும் தா ஆட்டைக்காணவில்லை என்று உனது எஜமான் கேட்டால் ஓநாய் அடித்து தின்றுவிட்டது என சொல்லு என மன்னன் கூறினான்.நான் ஒரு போதும் அப்படி செய்யமாட்டேன், ஒருபோதும் பொய் சொல்லவுமாட்டேன். என் முதலாளியை ஏமாற்றவும்மாட்டேன் என இடையன் கூறினான்.இடையனின் நேர்மையை பாராட்டி அந்த எஜமானிடம் இருந்து மொத்த ஆட்டுப்பண்ணையையும் விலைக்கு வாங்கி இடையனின் நேர்மைக்கு பரிசாக மன்னன் இடையனுக்கு கொடுத்தான். நாம் ஒரு போதும் மற்றையவரை ஏமாற்றாமல் பொய் சொல்லாமல் வாழ்ந்தால் நமக்கு நன்மையே கிடைக்கும்.

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட கதை உருவாக்கல் போட்டியில் 3 ஆம் இடம் பெற்ற கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாயும் மனிதனும்

பழங்காலத்தில் மனிதன் நாய்களை வேட்டையாடுவதற்கும் பாகாப்பிற்காகவும் பயன்படுத்தினான்.அப்போதிருந்து நாய்கள் மனிதர்களின் நண்பனாக விளங்கியது.தான் சாப்பிட்டது போக மீதி உள்ள இறைச்சி எலும்புகளை நாய்களுக்கு போட்டு வளர்த்தான்.ஆனால் தற்கால மனிதன் ஆடம்பர வாழ்க்கைக்காகவும் பாதுகாப்பிற்காகவும் வளர்க்கின்றான் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

இன்றைய சூழ்நிலையில் தனக்கு தேவையான இனத்தை தேர்ந்தெடுத்து வளர்க்கவே மனிதர்கள் விருப்பப்படுகிறார்கள்.அதாவது பாதுகாப்பிற்காக , பொழுதுபோக்கிற்காக , கௌரவத்திற்காக , அழகிற்காக என பல் வகையான விருப்ப நோக்கில் வளர்க்க விரும்புகின்றார்கள்.

உண்மையிலேயே நாய்களோடு நாம் நன்றாகப் பழகும் போது அது நம்முடன் நன்றியுடனே இருக்கும் , இது எனது அனுபவபூர்வமான உண்மை. நம்மில் யாருக்காவது முடியாமல் போனால் நம் உணர்வுளை புரிந்து அதற்கேற்றவாறு அது தம்மை மாற்றிக் கொண்டு வாழப்பழகிக்கொள்கின்றது.

நாம் அவைகளைப் பராமரிப்பதைப் பொறுத்து அவைகளோடு நெருங்கிப்பழகிக்கொள்ளலாம். உரிய நேரத்துக்கு தடுப்பூசிகளை போடுவதன் மூலமும் குளிப்பாட்டுதல் மூலமும் சுத்தமாக வைத்திருப்பதாலும் நெருங்கிப்பழக முடியும். சுத்தமான நீரை பருகக்கொடுப்பதும் பழைய உணவுகளை தவிர்த்து புதிய உணவுகளை உண்ணக்கொடுப்பதும் மிகவும் நல்லது.எம்மைப் போன்றே நாய்களையும் நன்றாகப்பராமரித்தல் வேண்டும்.

நாய்களை நாம் செல்லப்பிராணியாக வளர்க்கின்றோம். அது தக்க தருணத்தில் உயிர்காக்கும் இதுவும் எனது அனுபவபூர்வமான உண்மை. உதாரணத்திற்கு மலையகத்தில் ஓர்இடத்தில் மண்சரிவு ஏற்படப்போவதை தனது எஜமானுக்கு ஊழையிட்டு அறியத்தந்து அவர்களைக் காப்பாற்றியது என்பது பலர் அறிந்த உண்மை. மேலும் யாராவது அதற்கு தீங்கு செய்தால் அவற்றை மறக்காமல் பழிவாங்கும் குணமும் நாய்களுக்கு உண்டு என்பதும் எல்லோரும் அறிந்த விடயம். நாம் பழகுவதைப்பொறுத்து நாய்களும் நம்முடன் நன்றாகப்பழகும்.

திருமதி.விஜயநாதன் விஜயராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விஷ்வரூபம்

விக்கி எனப்படும் விக்னேஸ்வரன் தன் ஒரே மகளான ரஞ்சியிடம் மிகவும் பாசம் கொண்டிருந்தான். விக்கி அரச திணைக்களம் ஒன்றில் உயர்பதவி வகிக்கும் அதிகாரி.

ரஞ்சி பிரபல அரச பாடசாலையொன்றில் நான்காம் வகுப்பு படிக்கும் மாணவி. ரஞ்சியுடன் படிக்கும் ரஜனி என்னும் பிள்ளை மிகவும் வறுமையான ஒரு மாணவி. ரஜனியின் அப்பா விக்கியின் அலுவலகத்தில் கடைநிலை ஊழியர்.வறுமைக்கோட்டின் கீழ்வாழ்பவர்.

ரஞ்சியும் ரஜனியும் நல்ல நண்பிகள்.ரஞ்சிக்கு என்ன பொருட்கள் வாங்கினாலும் , அதேபோல் இன்னுமொன்று வாங்கி ரஜனிக்கும் கொடுப்பது விக்கியின் குடும்ப வழக்கம்.

இம்முறை புத்தாண்டிற்கு அழகிய விலையுயர்ந்த சட்டையொன்றை மகளுக்கு வாங்கிய விக்கி அதே போன்ற சட்டையொன்றை வாங்கி ரஜனிக்கு கொடுக்கும் படி அவளின் தகப்பனிடம் கொடுத்துவிட்டிருந்தார்.

ஒவ்வொரு புத்தாண்டு அன்றும் விக்கியின் வீட்டிற்கு ரஜனி பெற்றோருடனும் உடன்பிறப்புகளுடனும் வருவது வழக்கம். இவ்வாண்டும் அவ்வாறான தரிசிப்பு இடம் பெற்றது. அக்குடும்பம் வரும்போது விக்கி கடைத்தெருவிற்குப் போயிருந்தார்.

விக்கி தன்வீட்டிற்கு வாகனத்தில் வந்து இறங்கும் போது ரஜனியின் தகப்பன் கேற்றடியில் தயங்கி தயங்கி நின்றார். "என்ன கந்தசாமி .....உள்ளுக்குப்போகல்லையா...? கேற்றடியில் நிக்கிறாய்?" விக்கி கேட்டார். " ஐயா மனிசியும் பிள்ளைகளும் வீட்டுக்குள்ளதான் இருக்காங்க ....நான் உங்கட்ட ஒரு விசயம் சொல்லனும் ..." என்று தயங்கி தயங்கி நின்றார்." "என்னென்டு சொல்லு கந்தா...". ஐயா என்ன மன்னிக்கனும்.நீங்க சட்ட வாங்கித்தந்ததை நான் ரஜனிகிட்ட சொல்லல்ல ஐயா.....நீங்களும் சொல்லாதிங்க ஐயா....நான் சட்டையோட வீட்டிக்குப் போய்க்கொண்டு இருக்கக்குள்ள எம் சி குப்ப அள்ளுற றெக்டர்ல வேலைசெய்யிற என்ட பழைய கூட்டாளியொருவன் அழுதழுதுவந்து அவன்ட மூன்றாம் வகுப்பு படிக்கிற புள்ள காச்சல் வந்து செத்துப்போயிட்டாள், அவள்ற சாவுக்குப் போட நல்ல சட்ட ஒன்று இல்லை என்று கேட்டான் ஐயா. நான் அப்படியே நீங்கதந்த சட்டையை அவனுக்கு கொடுத்தேன் ஐயா! அந்தப்புள்ள அந்தச்சட்டையில தேவதக்குஞ்சு போல இருந்தாள் ஐயா என்ன மன்னியுங்க ஐயா" என்று சொல்லி விக்கியின் காலடியில் வீழ்ந்தான். "எழும்பு கந்தா ....எழும்பு....நான் கூட இப்படிச் செய்திருப்பேனா என்று தெரியாது. நீ மனச்சாட்சியுள்ள மனிசன் தான் ..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்று சொல்லிவிட்டு வாகனத்தில் ஏறி புடவைக் கடைக்குச் சென்றார். அவருடைய கடைநிலை ஊழியன் உயர்ந்த மனிதனாக விஷ்வரூபம் எடுத்து தெரிந்தான். 'இம்முறை முழுக்குடும்பத்திற்கும் உடுப்பு எடுத்துக் கொடுக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.'

ஆழியோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

கவிதை போட்டி (04.11.2025)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

சிறுவர்தின நிகழ்வு (07.10.2025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

விவாதம் (07.11.2025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

பேச்சுப் போட்டி (07.11.2025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

வில்லுப்பாட்டுப் போட்டி (07.11.2025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

விவசாயக் கருத்தரங்கு (14.10.2025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

பிராணிகளுக்கான பராமரிப்பும் நலனோம்தலும் விழிப்புணர்வு கருத்தரங்கு

(14.10.2025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

நடமாடும் நூலகம் (மட்/புளியடிமுனை GTMS)

(15.10.2025)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

நடமாடும் நூலகம் (மட்/தர்மரெட்ணம் மகா வித்தியாலயம்)

(16.10.2025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

நடமாடும் நூலகம் (மட்/நாவலடி கனிஷ்ட வித்தியாலயம்)

(17.10.2025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

O/L மாணவர்களுக்கான கணிதபாட விஷேட கருத்தரங்கு

(மட் / புனித மிக்கேல் கல்லூரி))

(08.10.2025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

O/L மாணவர்களுக்கான கணிதபாட விஷேட கருத்தரங்கு
(மட்/சிவானந்தா வித்தியாலயம்)

(09.10.2025)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

I.C.T கருத்தரங்கு (மட்/வின்சன்ட் மகளீர் உயர்தர பாடசாலை)

(23.10.2025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

கதை உருவாக்கப் போட்டி

(27.10.2025)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

சித்திரப் போட்டி

(28.10.2025)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

குறுக்கெழுத்துப் போட்டி

(28.10.2025)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

கட்டுரைப் போட்டி

(28.10.2025)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

சிங்கள மொழி மூல வாசிப்பு போட்டி

(29.10.2025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட நூல் சேகரிப்பும்,மீள வழங்குதலும்

(19.09.2025)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட

மாநகர சேவை பற்றிய வீதி நாடகம்

(19.09.2025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட

வில்லுப் பாட்டு போட்டி

(19.09.2025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

முதியோர் தினத்தை முன்னிட்டு முதியோர் இல்லத்தில் நடாத்தப்பட்டஅனுபவ பகிர்வும், கலந்துரையாடலும்

(01.10.2025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட

சித்திரப்போட்டி

1st

2nd

3rd

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஊக்குவிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பாடசாலைத் தோட்டத்தின் அறுவடையின் போது (மட்/வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுச் சுரங்கம் - 2025

இதழ் - 06

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பின்தங்கிய பாடசாலையாகிய திக்கோடை கணேச மகா வித்தியாலய நூலகத்திற்கு சிறிய நூல் இறாக்கையும் பாடசாலை மாணவர்களுக்கு பயன்படுத்தக்கூடிய (Pass Paper) களையும் வழங்கி வைத்த போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

INTERNATIONAL RESEARCH CONFERENCE OF LIBRARY
LIBRARY NETWORK
EASTERN UNIVERSITY, SRI LANKA

கிழக்கு மாகாண பொது நூலக ஊழியர்களின் கணினி அறிவும், பொது நூலகங்களின் கணினி தொடர்பான வளங்களும் பற்றிய ஆய்வு

IRCL 2025

திருமதி. றமா ராசலிங்கம்,
பொது நூலகம்,
மட்டக்களப்பு.

30th April 2025

உள்ளடக்கம்

- அறிமுகம்
- நோக்கம்
- ஆய்வு முறையியல்
- பகுப்பாய்வு
- ஆய்வின் முடிவு
- பரிந்துரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிமுகம்

- பொது நூலகங்களின் வினைத்திறனான சேவை வழங்குதலுக்கு அவற்றின் ஊழியர்களது அறிவுத்திறன், மற்றும் நூலக வளங்கள் பற்றிய மதிப்பீடுகள் அவசியமானவையாகும்.
- இத்தகைய மதிப்பீட்டுப் பின்னூட்டமானது நூலகத்தினையும் அதன் சேவைகளையும் வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் செல்வதற்குரிய ஆலோசனைகளை வழங்கும்.
- நூலகத்தின் தாய் நிறுவனத்திடமிருந்து நூலக வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளைப் பெறுவதற்கும் இத்தகைய பின்னூட்டங்கள் உதவிபுரியக் கூடியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிமுகம்

- கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் பொது நூலகங்களினூடாக அண்ணளவாக கிழக்கு மாகாணத்தின் 1,800,000 பொது மக்கள் பயனாளர்களாக காணப்படுகின்றனர்.
- இவ்வாய்வானது கிழக்கு மாகாண பொது நூலக ஊழியர்களின் கணினி அறிவு, நூலகங்களின் கணினி வளங்கள் தொடர்பான பின்னூட்டங்கள் பற்றி ஆராய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நோக்கம்

இவ் ஆய்வின் நோக்கமானது கிழக்கு மாகாண பொது நூலகங்களில் பணிபுரியும் ஊழியர்களின் கணினி அறிவு, நூலகங்களில் காணப்படும் கணினி வளங்கள் தொடர்பான மதிப்பீடு செய்தலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆய்வு முறையியல்

- இது ஒரு குறுக்கு வெட்டு ஆய்வாகும்
- கிழக்கு மாகாணத்தில் காணப்படும் 36 பொது நூலகங்கள் இவ் ஆய்வின் பிரதேசமாகும்
- இந்நூலகங்களில் பணிபுரிகின்ற எழுமாற்று முறையில் தெரிவு செய்யப்பட்ட 65 ஊழியர்களுக்கு Google படிவத்தின் மூலம் வினாக் கொத்து வழங்கப்பட்டது
- அளவறி, பண்பறி முறையில் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பகுப்பாய்வில் கண்டறியப்பட்டவை

ஆய்வுப்பிரதேசமும் நூலகத்தின் தன்மையும்



நூலகத்தின் மாவட்டம்



நூலகத்தின் தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பகுப்பாய்வு

நூலக ஊழியர்களின் தன்மை



ஊழியர்களின் பதவி



ஊழியர்களின் வயது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பகுப்பாய்வு

நூலக ஊழியர்களின் அறிவுத்திறன்

தரம் 8 வரை கற்றவர்	3.1%
சாதாரண தரம் (O/L) சித்தியடைந்தவர்	35.4%
உயர்தரம் (A/L) சித்தியடைந்தவர்	40%
டிப்ளோமாதாரி	12.3%
பட்டதாரி	9.2%

கல்வித்தகமை

MS Office	35.9%
Diploma in Software	10.9%
கணினியை அனுபவத்தில் இயக்குதல்	32.8%
கணினி பயன்பாடு தொடர்பான பரிச்சயம் அற்றவர்	20.4%

கணினி அறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பகுப்பாய்வு

நூலக கணினி வளம்



கணினிகளின் எண்ணிக்கை



நூலக கணினி மென்பொருள் பயன்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நூலகத்தினதும் ஊழியர்களினதும் தேவைகள்

பண்பறி பகுப்பின் மூலம் பெறப்பட்ட தரவுகள் எண்ணிடப்படத்தப்பட்டுள்ளன.

கணினி தேவை	50.8%
இன்ரநெற் வசதி தேவை	16%
சேவர் வசதி தேவை	6%
மேற்கூறியயாவும்	24.2%
வேறு தேவை	3%

கணினிப்பயன்பாடு தொடர்பான வளங்கள்

மேலும் தேவை	87.7%
போதுமானது	12.3%
தேவையற்றது	0%

கணினி அறிவு தொடர்பான தேவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கணினி அறிவு, கணினி வளம் பற்றிய சராசரி மதிப்பீடு



கணினி அறிவு



கணினி வளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆய்வு முடிவுகள்

- கிழக்கு மாகாண பொது நூலக ஊழியர்களின் கணினி அறிவானது பெரும்பாலும் நன்று நிலையில் காணப்பட்டாலும், தமக்கான மேலதிக பயிற்சித் தேவைகளையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.
- அத்துடன் கிழக்கு மாகாண பொது நூலகங்களுக்கான கணினி பயன்பாடு சார் வளங்களின் தேவைகள் குறைபாடுடையனவாகவும் காணப்படுகின்றன.
- இவை பூர்த்தி செய்யப்படும் போது நவீன நூலக சேவைகளை வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் ஆற்றமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பரிந்துரைகள்

- பொது நூலகங்கள் தொடர்பாகவும், அவற்றில் பணிபுரிவோர் தொடர்பானதுமான பின்னூட்டங்கள் குறித்த கால அளவில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்
- அதன் முடிவுகளை பொது நூலகங்களின் தாய் நிறுவனங்கள், நூலகம் தொடர்பான திட்டமிடலின் போது கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



THANKS!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media